உ
சிவமயம்

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும் திருவருள் பூண்டது.

இதழ்—1 பிங்களவருஷம் தைமாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை (10-2-78) சுடர்—8

RECEIVED 1978-3-20 PERIODICALS DIVISION LIBRARY

## என் நாயகன் விநாயகன்

### சென்ற இதழின் தொடர்ச்சி

மேகத்தின் தொகுதி ஒருங்கே திரண்டு பூமியிடத்து வழுக்கி விழுந்த தென்னும்படி; கொம்பால் பிளவுபட்ட கயமுகாசூரன் மழைநீர் ஆற்றுநீர் ஊற்றுநீர் எனும் மூவகை நீர் கொண்ட பெருங்கடல் உடைந்திட்டது போன்று பெரும் சத்தமுடன் கதறிக் கொண்டு சிறப்புடைய தனது தேர்மேல் வீழ்ந்து சோர்ந்தான். அவனுடைய நெஞ்சில் நின்றும்; பெருகும் ஆற்றின் நீர் பெருக்கம் போன்று இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.

இதழ் அவிழ்ந்த மாலைசூடிய திண்மையாகும் தோளினையுடையவனான கய்முகாசூரனின் நெஞ்சில் நின்றும் பெருகிய சிவந்த இரத்தநீர் கடல் போன்று பெருகிய நேரத்தில் அது பக்கராக வருகின்ற காடு ஒன்றிலே பாய்ந்திடலால் அந்தக்காடே திருச்செங்காடு என்னும் பேருடையதாகப் பெற்று இன்றும் நாம் காணும்படி இருந்தது. ஆனால் அது அப்படியாக உண்மைப் பொருளை ஆராய்கின்ற நல்ல உணர்வில் மேலோராகும் பெரியோர்களது அறிவிற்கும் அணுகிடாத சிவபரஞ்சுடர் கயமுகனுக்கு கொடுத்த முன்னைய வரத்தால் இறவாத கயமுகாசூரன் வீழ்ந்து இறந்தான் போன்று தனது முன்னைய உடலை விடுத்து வானமும் பூமியும் எரிந்து தீந்திடும்படி கண்ணால் நெருப்புப்பொறிகளைச் சிந்திடுகின்ற கோபமுடையதொரு எலியின் வடிவானான்.

கயமுகாசூரன் எலிவடிவாகி தேக்கிடும் கங்கையைச் சடைமீதணிந்த சிவபெருமான் திருக்குமரனைத் தாக்கும்படி வருதலோடும் எம்பெருமான் விநாயகன் அது கண்டு தாம் எழுந்தருளியிருந்த அசலன் என்னும் பூதனின் தோளின் நின்றும் நீங்கி நீக்க முடியாத வலியுடன் எலியினைத் தாக்கி அடக்கி, எலியே! நீ நம்மைச் சுமந்திடுவாய் என்று மிக உயர்ந்த எலியின் பிடரியில் ஏறி விற்றிருந்து எலியின் மேல் செல்லலுற்றார்.

மற்ற இச்செயலைக்கண்ட தேவர்கள் இந்திரன் முதலோர் யாரும் கொடிய கயமுகாசூரன் அழிந்தான் இனி எமது இடரும் போயிற்று அல்லவோ? எம் பகையும் அழிந்தது என்று கூறி ஆடினார்கள் பாடினார்கள். மகிழ்ச்சி மிகுதியால் செய்வதறியாது: தம்மேனியில் அணிந்த ஆடைகளை எடுத்து வீசி திடீரென அவற்றால் வானினை மறைத்தார்கள்.

அழகிய முகிலின் தோற்றம் கண்டு கொள்ளளும் மகிழ்வால் நிறைந்து இன்பமாகும் தோகை மயிலின் இனம்போல எல்லாத் தேவரும் குலாவி ஆடுகின்றார்கள். தேன் சொரியும் கொன்றை மலர் வேய்ந்த சடையுடைய சிவபெருமான் குழந்தையைத் தெரிந்திடாதபடி அவர் மேல் மலர்ந்த பூக்களை அள்ளிஅள்ளிச் சொரிந்துநின்று அவரின் புகழினைப் போற்றத் தொடங்கினார்கள்.

காப்பவன் நீ; அனைத்தையும் படைத்து அருள்புரியும் மேலோன் நீ! பரந்து அகன்ற உலகம் யாவையும் எரிப்பவன் நீ; ஏனைய மறைத்தல் அருளல் முதலாய செய்கைகளையும் செய்திடும்பெருமான் நீயே. சாரமற்ற பேதைச் செயல் என்ன; எமது உள்ளத்துள் வெதுப்புகின்ற துயரமான இன்னலைப் போக்கிட நினைந்தல்லவோ அறியொணாத நீ நாம் இன்று காணும்படியான ஐந்து கரமும் யானை முகமும் சிவந்த சடையும் மூன்று கண்ணுமாய இந்த அருளுருவத்தைக் கொண்டாய்.

உன்னிடத்துப் பிறந்த வேதம் உனது பெருநிலைமை இப்படியானது என இன்னமும் உணர்ந்ததில்லை. அவ்வாறிருப்ப நாம் உன்னை எவ்வாற்றால் அறிவோம். நீயே பெற்ற தாயும் தந்தையும் ஆயினை. அதனால் உன் குழந்தைகள் சொல்லிய புகழ்ச்சிகள் யாவற்றையும் நீ பரிவுடன் கேட்டாய்போலும்.

என்று தேவர்கள் யாவரும் அன்ன வாகனமுடைய பிரமதேவருடன் கூடி வணங்கிப் போற்றி நன்றிகொண்ட மனமுடையோராய் மலர்ந்த முக ஒளியுடன் யாவரும் கனக சபேசரின் திருக்குமரன் விநாயகப்பெருமான் பாலாக வந்து சூழ்தலோடும் எம்பெருமான் அவர்க்கு ஒருப்பாடான கருணையான பார்வையால் எக்கால[illegible]தார்!

எம்பெருமான் அருளால் இனி நாம் எல்லாரும் உய்ந்தோம் என்று அன்னப்பறவை வாகனம்மேல் எழுந்துவரும் பிரமனும்; வெள்ளையானை ஐராவதத்தை உடைய இந்திரனும் யாரும் எம்பெருமானைப் போற்றித் துதித்துச் சேர்தலும் அதுவேளை முன்பு அரசருடன் நிகழ்ந்த போரில் கொடும் தொழிலுடைய கயமுகாசூரனால் உடல் வெட்டுண்டு இறந்த பூதங்களை எம்பெருமான் நோக்கி நீவிர் எழுந்திடுங்கள் என அருள் புரிந்தார்.

அவ்வகை எம்பிரான் அருள்புரிதலோடும் அப்பூதங்கள் யாவும் அரகரா எனச்சொல்லி எழுந்து துதித்து கரிய நஞ்சுடைய கண்டத்துக் கடவுளின் திருக்குமரனை வணங்கி குறைவிலாத பூதர் யாரும அங்கு கூடினார்கள். இவற்றையெல்லாம் செப்பமுடன் உணர்ந்து கொண்டான் ஒளியிலாத அசுரர்க்கு அரசன் அசுரேந்திரன்.

மந்திரியாம் சுக்கிரனுக்கும் இந்த நிலையை எடுத்துக்கூறி வருத்தப்பட்டு அழுது குழறி துயரமுற்று இனி எவ்வாற்றாலும் நான் தப்பிச்செல்லல் வேண்டுமென்று அவன் நினைந்து ஓர் பறவையின் வடிவாக உருவெடுத்து வானத்தில் பறந்திடும் பறவைகளுடன் கூடி அந்த மதங்கமாபுரத்தை விடுத்து நீங்கி மனதில் துயரம் கூர்ந்திட செம்பொன்மயமான மேருமலையிற் சென்றான்.

அம்மலையில் தாழ்ந்த பெரும் அடிவாரத்தில் சூரியனுடைய கிரணமும் சென்று உட்புகமுடியாத சோலை ஒன்று உண்டு. அவ்விடத்து ஓர் குகையுள் இருந்த மிக்க பக்குவமான காவலுடைய ஓர் பொந்தினுள் புலம்பியவாறு ஒழித்திருந்தான் அசுரேந்திரன் தேவ அரசன் இந்திரனுக்கும் ஊழிக்காற்றைப்போன்று வளைத்துச் சூழும் பூதங்கட்கும் பயந்து.

தேவர் பகைவனான அசுரேந்திரன் மதங்கமாபுரத்தை விட்டு நீங்கிப் போன காலையில் கொடியவர் கொடுமைசெய்யத் துணையான மந்திரியாய் இருந்த சுக்கிரனும் ஓர் பறவை வடிவாகி தனது உலகை அடைந்து அந்த இப்பூமியில் தவவேடம் பூண்டு கொண்டு செய்யத்தகாதனவற்றைச் செய்து ஊனை உடம்பினை வளர்த்துக் கொள்வார் போன்று சிந்தை ஒருக்காலமும் ஒருமைப்பாடு அடைய முடியாத யோகத்தில் இருந்தான்.

தீயனபுரிவார் யோகம் செய்தாலும் அதில் உறுதி அடையார் என்பது தெளிவாகிறது. இதனாலே எல்லா நலப்பாட்டிற்கும் அடிப்படை தருமமும் சீலமும் என்பது எவ்விடத்தும் வலியுறுத்தப்படல் வேண்டும்.

பூதங்களும் அந்தக்காலை மதித் சூழ்ந்த நகரத்திடையாகச் சென்று அங்கு வாழ்ந்த நீதியில்லாத அசுரராகி ஒளிவீசிய படைகளைக் கைக்கொண்டவரர்யிருப்போரை எல்லாம் கொன்று கொடிய கோபம் நிறைந்த போரை முடித்து மீண்டு போர்க்களத்து வருதலோடும் ஆதியாகும் [illegible] விநாயகப் பெருமான் அவ்விடத்தில் நின்றும் அகன்று மீண்டருளினார்.

எம்பெருமான் மீண்டு திருச்செங்காட்டங் குடியில் ஓர்புறமாகச் சென்று அங்கு முழுவதும் உண்மையான ஞானத்தின் மேலாகத் தாண்டவம் புரியும் தந்தை சிவனின் உருவம் ஒன்றைத் தாபித்து வணங்கி மனதில் எழும் பேரன்பினால் பூசைபுரிந்தார். யாவராலும் காணக்கூடிய திருச்செங்காட்டங் குடியில் உள்ள அவர்பூசைபுரிந்த அத்தானம் இன்றும் உள்ளது. அதனை கணபதீச்சரம் எனும் கோயில்என்பார்கள்.

முப்புரங்களையும் எரிசெய்த கடவுள் சிவமூர்த்தியைப் பூசனை புரிந்த பிற்பாடு நெருப்புப்பொறிகளைக் கண்ணால் சொரிந்திடும் எலி வாகனத்தின்மீது இனிதாக ஏறி இந்திரன் பிரமன் தேவர்கள் யாரும் தொழுது உடன் சூழ்ந்து வணங்கிட பாம்புருவாக விஷ்ணுமூர்த்தி இருக்கும் திருவாலங்காட்டில்வந்துசேர்ந்தருளினார்

புகுந்தபொழுதில் அங்கு முன்னே ஓர் ஆலமரப்பொந்தின் இடையே இருந்து சிவபெருமானின் பொன்னார்ந்த திருவடிகளை நினைந்து மிகுந்த தவம்புரிந்த விஷ்ணுமூர்த்தி; ஐங்கரமுடைய எவர்க்கும் முன்னவராம் விநாயகப்பெருமான் அங்கு வந்தருளியதை மனதில் தெரிந்து விரைவில் எழுந்து சென்று எம்பிரான் விநாயகனை வணங்கித் தரிசித்திடலோடும் அந்தஉடன் எம்பிராட்டி கொடுத்த பாம்பாகும் சாபம் அகன்றிடலும் அதுவேளை விஷ்ணுமூர்த்தி சக்கரம் சங்கு தண்டு வாள் சார்ங்கம் எனும் வில் என்னும் ஐந்து படைகளைக் கைக்கொண்ட தனது முன்னைய பேருருவத்தினைப்பெற்றார்.

### விஷ்ணுவின் சாப நீக்கமும் பெருங்கதை எனப்படும் சஷ்டி வழிபாடும்

நாராயணக்கடவுள் தனது முன்னைய வடிவம் தன்னிடத்தாகத் தோன்றிடக் கண்டு மகிழ்ச்சியால் சிறந்து சிவனருளை மனதில் கொண்டு துதித்து மேலோனாய விநாயகப்பெருமான் திருமுன்பு சென்று வணக்கம் செய்து மீண்டும் பெருமானை வணங்கி விமலனே தேவரீர்க்கு அடியேன் செய்திடும் மேலோங்கிய பூசனையை இன்று நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பூசனை புரியுமாறு எனக்கு பணித்தருள்க ஆதியான சிவபெருமான் பாகத்தமர்ந்து மூலமாகும் ஓங்காரப் பொருளாய் நின்ற உமை சாபம் அதனை தொலைத்த முதல்வனே! என வேண்டினார் விஷ்ணு.

ஐந்து கரமுடைய விநாயகப்பெருமான் திருமால் உரைத்த வார்த்தையைக் கேட்டு அவ்வாறே செய்க என அருள்புரிந்து அவ்விடத்து வீற்றிருப்ப அதுபோது விஷ்ணுமூர்த்தி சிறந்து விளங்கிய திருமஞ்சன நீர், சந்தனம், பூமாலை, வாசமுடைய தூபம், தீபம் முதலியன கொண்டு வந்து சிவபெருமான் திருமைந்தனை அருச்சனை புரிந்து அன்பால் குறைவிலாத பலகாரவகை பலவும் சிறப்புடன் எடுத்து பால்பொங்கலாம் அமுதினையும் முன்னம் படைத்து நிவேதித்து போற்றி செய்து எம்பெருமான் விநாயகனுக்கு இந்த ஓர் வார்த்தையினைச் சொல்லல் உற்றார்:

தனுசு என்று சொல்லப்பெறும் மார்கழி மாசத்தில் பூர்வபக்க சந்திரனில் வரும் பக்கமாகும் சஷ்டி எனப்படும் இன்றைய நாளில் யான் தேவரீரை அருச்சித்திட்ட இந்த இயல்பே போன்று யாரும் இனி முடிவிலாத உன் பொன்னார்ந்த மலரடிகளைத் தஞ்சமென நினைந்து பூசை புரிந்திடவும், அவ்வாறு பூசை புரிவாரது துயரங்கள் யாவற்றையும் அந்நாளே நீ நீக்கி அழிவிலாத செல்வத்தைக்கொடுத்திடவும் வேண்டும். இந்த ஒரு வரத்தைத் தந்தருள்க எம்பெருமானே என்றார் விஷ்ணுமூர்த்தி.

நாராயணக்கடவுளின் வார்த்தையை எம்பெருமான் விநாயகன் கேட்டு; திருமாலே அப்படியே ஆகட்டும். உனது பூசனையை மகிழ்ந்தனம் என உவந்து கூறி விஷ்ணுமூர்த்தியும் பிரமன் முதலோராய தேவர் யாவரும் ஆநந்தமாகி அன்பினால் வாழ்த்திசைப்ப எலி என்னும் தூய தானவொருவாகனத்தில் எழுந்தருளி பூத கணங்களாயினோர் சூழ்ந்து உடன் வந்திட கைலைமலை என்னும் குற்றம் நீங்கிய மலையில் அன்பினால் சென்று அங்கு சிவபெருமானை வணக்கம் செய்து பெருகிடும் அருளைப் பெற்று தனது முன்னான திருவாய்தல் நிலயத்தில் சென்று வீற்றிருந்தருளினார்.

அன்றைய தினத்தினிலே விஷ்ணு பிரமன் முதலாய கடவுளர் வந்து நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் பாதங்களில் முழு அன்புடன் மும்முறையாகத் தாழ்ந்து வணங்கி அருள்பெற்று மீண்டனர். இதனாலே தமது முன்னைய பேதமைகள் திகைப்புகள் யாவும் நீங்கினர்.

அப்பால் வந்த யானைமுகமுடைய விநாயகப்பெருமான் திருவடிகளைத்
(தொடர்ச்சி 8-ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழின் ஆகமம் திருமந்திரம்

## சென்ற இதழின் தொடர்ச்சி

வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும்வே தியர்வேள்விக்காய்
வேதம்உரைத்தானுமமெய்ப்பொருள்காட்டவே.

வேதத்தை உரைத்தவனும் உண்மையான வேதியன் ஆகின்றானில்லை. ஆனால் வேதத்தை உரைத்தவன் ஆதியான பிரமன். அவ்வாறு தன் உள்ளே கேட்கப்பட்ட வேதத்தை விளங்கிட உலகில் உரைத்தான் பிரமன் எதற்காக எனில் வேதத்திற்கு உரியவரான அந்தணர் செய்திடும் வேள்விக்காக. அதுவன்றி அழிவிலாத மெய்ப் பொருள் இது வென்று உணர்ந்திட எல்லார்க்கும் முற்பட்ட சிவன் அந்த வேதத்தை உரைத்தான். 62

இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே.

இருக்கு வேதமாய ஓங்கார உருவமாம் எழிலுடைய அந்த வேதத்தின் உள்ளே; உள்ளத்தை உருக்கும் உணர்வாகி அந்த உணர்வின் உள்ளும் உணர்வாகி அறியப்படாத அந்த வேதத்துள் பெருகி காணமுடியாது அஞ்சிடவைக்கும் பேரொளியாம் வடிவாகி எல்லா அந்தணரும் எங்கிருந்தும் சொல்லும் சொல்லுக்கு கருவின் உருவாய் நின்றவன் கண்ணுதற்கடவுளாய சிவன். அவனே அவ்வேதத்தை அருளினான். ஏனையோரது உணர்வு போலன்றி உணர்விற்கு உணர்வாயது வேதம் உரைத்தது. 63

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனுஞ் சோமனும் ஆரழல் வீச
உருக்கிளர் ரோமம் ஒளிவிடுந் தானே.

மந்திரவடிவான வேதசுலோகங்களாய இருக்கும் எண்ணிலி கோடி மந்திரங்களால் எல்லாவற்றிற்கும் உதிக்கின்ற ஒரு பொருளாய மூலத்துள் அங்கே இருக்கின்ற சந்திர சூரியனும் அகவழிபாட்டில் சிறந்து அற்புதஒளிகளாக வீசிடதியான பாவனையால் சிறந்தவேதம் ஓதும் அத்தகைய அந்தணருடைய உருவத்தில் உள்ள உரோமங்கள் தானும் ஒளிவிடும் தானே. 64

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

திருவுடைய ஒருவரின் நெறியாவது சித்து அசித்து எனும் தன்மையாய அறிவும் அறியாமையும் கடந்து அப்பாலாய் நன்மைக்கும் தீமைக்கும் நடுவாய் பெருநெறியாகப் பரம்பிய பெருமானை நினைந்துஅவர் குருவாக வந்தருளிய அற்புதம் உணர்ந்து அக்குருநெறி ஒழுகி சிவமாகும் நெறி கூடும் ஒரு நெறியே ஒன்றாக உமக்கு கைகூடிட வேதாந்தத்தை ஓதுங்கள். 65

ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.

ஆறுவகை அங்கங்களாக வருகின்ற பெரும் வேதமாகி எல்லாம் உணர்கின்ற ஞானமயமாகி என்றும் உள்ள ஞானமான இறைவனை தம்மிடத்து உள்ளத்துள்ள ஒரு கூறும் தன்மை யாகக் கொண்டு தம்முள்தானே அதுவாக இருக்கும் குணத்தை பயின்று வருவார் இவ்வுலகில் இல்லை. இதை விடுத்து இறைவனை வேறோரு பொருளாக விளைவு செய்து புறமாகிய செயல்களில் ஈடுபட்டு அலைந்து அதன்மூலம் பேறு பெறலாம் என்று அதனையே வேதத்தின் அங்கமாக பெருக்கி நிற்கின்றார்கள்? 66

பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றாரே.

பாடலும் சிலம் பொலியும் பரப்பநடமாடும் கணிகைப் பெண்களுடைய நடனமும் குறைவிலாத இப்பூமியில்; அங்கு இங்கு எங்கும் திருக்கூத்து என்பதை உணரமாட்டாதார் யாகத்தினை மிக விரும்பிச் செய்கின்றார்கள். அவர்கள் உண்மை ஒளியாம் வேதவடிவாய சிவனை அறிகின்ற வயிராக்கிய விரதம் இல்லாதவர். அவர்களேபொருள் ஈட்டும் அவாஞ்சையால் பல இடமும் சென்று சண்டை பிடிக்கிறார்களே. 67

### ஆகமச் சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
எஞ்சலில் விஞ்ஞுகர் இருபத் தெண்மரும்
அஞ்சாமுகத்தில்அரும்பொருள்கேட்டதே.

நீல நிறவடிவினளாகிய அருளுருவ மேனியுடைய பெண்ணை ஓர் பாகமுடையவன் சிவன் அருள் செய்த ஆகமங்கள் இருபத்தெட்டு உள. அந்த ஆகமங்கள் ஏதும் குறைவிலாத அருள் வித்தை உடைய இருப்த்தெளட்டு முனிவர்கள் தமது உள்ளேகேட்கப் பட்டதன்றி கற்பனை யால் அனுமானுதிகளால் ஆகமங்கள் செய்யப்படவில்லை. முனிவர்கள்சிவனது ஐந்தாவது முகத்திருந்து அந்த அரும்பொருளாயஆகமங்களைக் கேட்டார்கள். 68

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே.

எவர்க்கும் ஆதியாய சிவன் அருளிய இந்த ஆகமங்கள் இருபத்தெட்டானவற்றை உணர்ந்துஎண்ணில்லாதஇருபத்தெண்கோடி நூறாயிரம் சுலோகங்களாக அத்தேவர்கள் ஈசன் பெருமையை எடுத்துரைத்தார்கள். அடியேனும் அப்பொருளை எண்ணி நின்று இப்பொழுது துதித்திடுவேன். 69

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மே லெழுத்தே.

சிவன் அருளால் அருளப்பெற்ற சிவாகமங்கள் வானில் வாழும் தேவர்களுக்கும் விளங்குதல் அரிது. அண்ணலாகிய சிவன் அருளால்ஓதிய அறிவு அது உம்மிடத்தும் உள்ளது. அதை அறியாவிடின் எண்ணிலிகோடி ஆகமச் சுலோகங்களும் நீர் மேலாக எழுதிய எழுத்துக்கு நிகராகும். 0

பரனாய்ப் பராபரங் காட்டி உலகின்
தரனாய்ச்சிவதன்மந் தானேசொல்காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்க நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே.

யாவற்றிற்கும் மூலமாய பரனாய் எல்லாமும் அல்லவும் ஆகிய பராபரம் காட்டி உலகினைத் தாங்குபவனாய் தனது தருமமாய சிவதன்மத்தினை தான் சொல்லும் காலத்து ஆதியான கடவுளாய்; அத்தரும வழி உணர்ந்து தேவர்கள் அர்ச்சிக்கும் என்குருவான நந்தி என் உள்ளத்துடனாகி ஒன்றேகாண் ஒன்றாகி ஆகமங்களாகி ஓங்கிப்பரந்து எங்கும் நின்றான். 71
(ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க என மாணிக்கவாசகர் ஓதியதையும் உணர்க)

சிவமாம் பரத்தினிற் சக்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே.

சிவமாய மூலப் பொருளில் நின்று சத்தி தோன்றி சதாசிவம் தோன்றி அதனின்றும் அனைத்துலகும் இயங்க உவமை காணமுடியாத உமையும் ஈசனுமாக மகேசன் உருத்தோன்றி உருத்திரனும் நந்தி குருவும் தவம் புரிகின்ற திருமாலும் பிரமனும் ஈசனும் எல்லாக் கடவுளரும் தங்களில் தாங்கள் பெற்றுணர்ந்த ஒன்பது ஆகமங்கள் யாவற்றையும் எங்கள் குருவாய நந்தி தாமும் பெற்றான். 72

பெற்றநல் ஆகமம் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே

மேலோதியநலம் பெற்றுள்ள ஆகமங்கள் ஒன்பது காரணாமம் காமிகாமகம் நல்ல வீராகமம் உயர்ந்த சிந்த ஆகமம் வாதுளாகமம் மற்று அந்த வியாமளாகமம் காலோத்தரவாகமம் சுப்பிராகமம் மகுடாகமம் என்பன.73

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில்வேதாந்த சித்தாந்தமெய்மையொன்
றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே.

இந்த ஒன்பது ஆகமங்களில் அதனின்றும் தோன்றிய இருபத்தெட்டு ஆகமங்களும் பாசத்தினை நீக்கும் தன்மை என அதனால் இந்த இருபத்தெட்டும் பதி பசு பாசம் என்னும் தன்மையை எடுத்துக் காட்டும். அன்றியும் இவை மூன்று விதமான கருமகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டம் என மூன்று ஆகமப்பிரிவாக விளங்கும். ஆதலினாலே இவை உணர்தலே வேகம் இல்லாத வேதாந்த சித்தாந்த உண்மை ஒன்றாக முடிந்த சிவ சம்பந்தமான அரிய சுத்த சைவம் ஆகும். 74

### அந்தணரொழுக்கம்

அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப்போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.

அந்தணர் என்போர் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழிலையும் தம்மில் கொண்டுளோர். அக்கினி வளர்த்து காலை மத்தியானம் மாலை என்னும் மூன்று காலமும் தமது நியமங்களைச் செய்து தமது தவமான நற்கருமத்தினில் நின்று அங்கு இறைவனுக்கே தம்பணியை ஒப்புவித்து மூன்றுசந்தியிலும் ஓதி தங்களுடைய சடங்குகளை முட்டின்றி செய்வார்கள். 75
(இதனை முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு உரிய மூர்த்தி கண்டாய் — திருநாவுக் கரசர் தேவாரம்.)

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயாமறையோர்கள்தாமே.

காயத்திரி மந்திரத்துக்குரிய பொருளையும் கருதுகின்ற சாவித்திரி மந்திரத்துக்குரிய பொருளையும் ஆராய்வதற்காகச்செய்யும் செயலில் உவப்பார்கள். அவற்றுக்குரிய மந்திரங்களை நினைந்து அன்பெனும்தேரின் மீது ஏறி என் நேரமும் அதனை நினைவில் கொண்டு அன்பே உருவாகி மாயத்துள் தோயாதவர்கள் அந்தணர்கள் எனப்படுபவர்கள். 76

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே.

பெரிய நெறியென்னும்படியான பிரணவப் பொருள் உணர்ந்து தன் குரு காட்டிய நெறியால் ஒழுகி அந்நெறி கூடி நான்கு வேதமும் காட்டிய திருவுடைய நெறியான கிரியை கடைப்பிடித்து இருந்து அதன் சொருபமானோர் ஏதும் குற்றமிலாத அந்தணர் ஆவார். 77

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியேவாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே.

உண்மையும் தவமும் தான் அவனாகின்ற பாவனையும் இழிவிற்கு ஆளாக்குகின்ற இந்திரியங்களை அதன் நிலையில் கெடுக்கலுமான இந்நிலையால் உயிராம் தன்மையை உணரும் உணர்வினைக் கடைப்பிடித்து மாயா காரியங்களை நீக்குதலினால் அப்பிரமம் என அந்தணர் ஆவார். 78

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கைஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங்கேட்டவர்வேட்கைவிட்டாரே

வேதத்தின் எல்லையினைக் கேட்கவிரும்பியஅந்தணர்கள் வேதாந்தம் கேட்டும் தம்முடைய ஆசைப்பாட்டை நீங்கினாரில்லை. வேதாந்தமாவது வேட்கை ஒழிந்ததாகும். அதாவது ஆசை ஒழிந்த இடம். உண்மையில் வேதாந்தம் கேட்டவர் பாசத்தினை விடுத்தவராவர். 79

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடைய அந்தணர் காணும் நுவலிலே.

பூணூலும் குடுமியும் வைத்தால் அது அந்தணர் என்று பொருளாமோ?நூல்எனின் பொருள் கருமை நிறைந்த பாசமாகும. நுண்ணிய குடுமி மயிர்முடியாகும். இப்படியாகக் கருதப்பட்டால் பூநூலும்குடுமியும் பிரயோசனமற்றதாகும். உண்மையில் நூலையும் உச்சிக்குடுமியின் பொருளையும் உணராத அந்தணர்க்கு. அந்தணர் அணியும்நூல் என்பது வேதத்தின்எல்லையைக் குறிப்பது. குடுமி ஞானமயத்தினைக் குறிப்பது. இவற்றை யெல்லாம்வேதங்கள் சொல்லுகின்றன. அதனிடத்து அந்தணர்கள் கண்டு கொள்க. 80

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்தவிடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.

உண்மை இன்றி தனியான ஞானத் தன்மை இன்றி தம்முடைய பாசங்களை எல்லாம் விடுத்து உணரவேண்டிய உணர்வு இன்றி பக்தியும் இன்றி பரனாய சிவன் உண்மை இன்றி பொருள் வாஞ்சையால் புகழ்வாஞ்சையால்பயித்தியம் உறுகின்ற மூடர்கள் ஒரு போதும் பிராமணர் அல்ல. 81

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தணரும் அவர் பெருமையும்

## செந்தமிழின் ஆகமம் சிறப்புறத் தருவன

இப்பகுதியில் நடுவே தரப்படிருக்கும் ஸ்ரீசாமி விஸ்வநாதக் குருக்களின் அறவுரையில் நாம் சிந்திக்கவேண்டிய பல விடயங்கள் உள. இதை நாம் ஓர் கண்டனமாகக் கருதக் கூடாது. இன்றைய உலகில் இதனை ஒரு தெய்விகக் கருத்துரையாகவே நோக்கல் வேண்டும். அந்தணர்களது சீலங்கள் பற்றி இத்தீபத்தின் இரண்டாம் பக்கத்தில் வேதச் சிறப்பு அந்தணர் ஒழுக்கம் ஆகுதி வேட்டல் முதலிய அரும் பெரும் தலையங்களில் செந்தமிழ் ஆகமம் திருமந்திரம் சொல்வதைப்பாருங்கள். அதில் அந்தணர் யார் அவர் உயர்வு எப்படி அவர் செயல் யாது என்பதெல்லாம் நன்குடன் காணப்படுகின்றது அப்பாடலினுக்கு நாம் மிகு சுருக்கமாக ஆனால் நல் ஆராய்வுடன் உரையையும் அப்பாடலின் கீழ்தந்துள்ளோம்.

ஆகவே அதை நாம் நன்குவிளங்கிக் கொண்டால் முட்டிலாத் முத்தீச் செல்வத்து அருளாளராய அத்தகைய அந்த அந்தணர்களை இன்றைய உலகில் பெரியவாள் என பலராலும் கருதப்படும் மடாதி பதிகள், அவர் காலில் மலரிட்டுத் தாழ்ந்து வணங்கப்படும அத்தகைய பெருமை உடையவர்கள். அத்தகைய அந்தணர்குலம் இவ்வுலகில் என்றும் வாழவேண்டும். நாங்கள் அவரைப் போற்ற வேண்டும். அவரது வாழ்விற்கு நாம் உடைந்தையாக அவர்க்கு தொண்டு செய்பவராக வரவேண்டும். இது என் கருத்து மட்டுமன்று. அன்று வந்த திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவாக்கும் அப்படி. திருப்பாசுரம் பாருங்கள்.

பூணூல் அணிந்தால் மட்டும் அந்தணராக முடியாது. திருமூலர் சொல்லிய விதத்தைப் பாருங்கள். உங்கள் சிந்தையில் கொள்ளுங்கள். தட்டார் தச்சர் கொல்லர் வாணிகர் எல்லாரும் இன்று நூல் போடுகிறார். இது அந்தணர் போடும் நூல் அன்று; இது பிழைப்பதற்காக அணியப் படுவது. ஆனால் அந்தணரது நூல் அருளின் தொடர்புடையது. அவரை இருபிறப்பாளர் என்னும் பெருமையைக் காட்டுவது. இதனை பெரும் பாலான அந்தணர்கள் தெளிந்திடுவதில்லை.

அந்தணர் குலத்தில் பிறந்து நூல் அணிந்து வேதங் கற்று தங்கட்குரிய நெறி வழி ஒழுகாதாரை அந்தணர் எனலாமா? எனச் செந்தமிழின் ஆகமம் செப்புகின்றது. நான் அதனை வலியுறுத்தியே உள்ளேன். இங்கு இன்றைய உலகில் அந்தணர் குலத்து புண்ணிய வசத்தால் பிறந்தும் நூல் அணிந்தும் அருள் வழி நாட்டமிலாது தத்தமக்குரிய அறநெறியைக் கைவிடுத்து பேராசிரியராக; ஆசிரியராக வைத்தியராக மந்திரியாக எஞ்சினியராக குமஸ்தாவாக அல்லது தனது கோவில் தொண்டை பிறரைச் செய்ய வைத்து தாம் எஜமான் என்று இறுமாந்திருக்கும் நிலையுள்ள அந்தணராக தமதுகுல நெறிதவறிய அவரை யாம் ஒருபோதும் மதித்திடோம். திருமூல தேவர் வாக்குப்படி அவர்கள் அந்தணர்கள் அல்ல. எல்லாரையும் ஐயா என்று உபசாரமாகக் கூப்பிடுவது போல் அவரையும் என்ன ஐயா எப்படிச் சுகம் என்று கேட்கலாமே ஒழிய உண்மையில் தனது அறத்துக்குரிய செயலை கைவிட்டாரை நாம் மதித்தல் தகாது. அப்படிச் செய்தால் இன்றைய சூழ்நிலையில் நாம் சிவநெறிக்குத் செய்திடும் குற்றமாகும். உண்மையாக எத்தனையோ ஐயாமாருக்கு தாங்கள் ஆர்? தாங்கள் அணியும் பூநூல் எதற்காக அணியப்படுவது குடுமி ஏன் வைப்பான் குடுமி எதைக் குறிக்கிறது என்பது தெரியாது ஏதோ பூ நூல் சடங்கு என்று சொல்லி பத்துக் கூட்டம் மேளம் வில்லுப்பாட்டு கச்சேரி நடனம் விருந்து உபசரிப்பு எல்லாம் பிரமாதம். ஆனால் பூ நூல் அணியப்படும் அந்த பிள்ளை; தான் என்ன வாழ்வை மேற் கொள்கின்றேன் பூநூலை எதற்காக அணிகின்றேன் இதனால் என்ன பயன் எனக்கு என்பதெல்லாம் தெரிந்திட சந்தர்ப்பம் கிடைக்குதோ எனக்குத் தெரியாது. சிலர் சொல்லலாம் அதெல்லாம் அந்தக் காலம் இப்ப அவைதேள்வை இல்லை என்றால்; பிராணாயாம வழி; சரியை; கிரியை; யோகம்; மந்திரபாவனை; தியானம்; செபம்; ஒழுக்கம்; இவற்றால் வரும் பேறான அருட்டன்மை அவை மாறவில்லை. அவை மாறவும் முடியாது. அதை மாற்றிக் கொண்டவர் உயர்ந்த நிலையை அடைந்து கொண்டவர் ஒருவரில்லை.

திருமூலதேவர் தமது திருமந்திரத்து மிக அழகாக ஈசன் சிவனுக்கே ஆததி கொடுத்து யாகம் புரியும் வேதவழி வந்த அந்தணர்கள் தாம் செல்ல வேண்டிய அருட்கதியினை நாடி இன்பமாம் அமுது பெற்று புறத்தும் அந்த இன்ப நிலையை அறியாதார்க்கும் அறியுமாறு அந்த இன்ப நிலையை உணர்த்தி தாமும் அருளாய அமுது உண்ணுவார் என்றும் தாமே விதிவழி ஒழுகுதலை வேண்டிக் கடைப்பிடித்து தம் அறிவாலே அடைந்து கொண்ட வரலாறு அற்புதமாவது என்கின்றார். இதனை நாம் சித்தத்திற் கொள்வோமாக.

சமயத்துறையில் குருமாராக இருந்து இல்லறம் நடத்தும் அவர்க்கு இன்றைய நிலையில் பொருளாதாரம் மிகுந்த ஒரு பிரச்சனையைக் கிளப்பி உள்ளது. இன்று பெரும் பாலானமக்கள் நவீன முறையில் தமது வாழ்வினை அமைத்துக் கொண்டார்கள். இவரது வாகனச் சிறப்பு நவீன உடை வானொலி டேப்றைக் கோடர் வீடு மின் ஒளி மின் விசிறி நவீன முறை உணவு உண்ணும் பாங்கு விருந்து உபசரிப்பு யாவும் வேத நெறியுடையார்க்கு மிகவும் சங்கடத்தை வருவிப்பதாகவே பெருகிக் கொண்டன என்பதைநாம் உணராமல் இல்லை.

அடுத்த வீடு மாளிகை கட்ட நான் குடிசையில்வாடகை வீட்டில் வசதிக்குறைவுடன் இருப்பதா என்ற ஒரு மனத்தாக்கல் அந்தணர்க்கு வராது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த மனத்தாக்கத்தை நீக்குதல் மிக மிக அரிது. ஆகவே இதனைவெல்லும் ஆற்றல் அந்தணர்கள்தாம் செய்யும் தவத்தில் கிரியைகளில் தான் தங்கியுள்ளது. இது என் கருத்து மட்டுமன்று. கச்சியப்பர் சேக்கிழார் பரஞ்சோதி முனிவர் முதல் அனைத்து அறவாணருடைய கருத்து மாகும் அவர்கள் எமக்கென தந்த நூல்களில் இந்த நுட்பங்களைக் கண்டுகொள்க

தன்னை உணர்ந்து தனது தலைவனை உணரத்தலைப்படும் உண்மையான அந்தணர் அவர் ஒருபோதும் இன்றைய உலக மக்கள் பெரிதென போற்றும் வாகனம் வீடு உடை மின் ஒளி முதலியவற்றையும் பெரிதெனக் கொள்ளார்கள். அவர் பெரிதாகக் கொள்வது சிவன் அருளே. அருளை நாடுவார்க்கு பெரிது புண்ணி

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

உ

### நவாலி ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தீபத்திற்கு வழங்கிய அறவுரையும் வாழ்த்தும்

முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் என்பது திருத்தொண்டத்தொகையில் தமிழ்வேதப் பாடலில் அமைந்த வாக்கியம். இது இப்படி இருக்க அந்தணர்கள் தூய்மை உடையவர். வேதநெறிதவறாது வாழ்பவர். ஒழுக்கம் நிறைந்தவர். சிவபூசையும் அக்கினி வழிபாட்டையும் முறையே நடத்திவருதலினால் அவர்களிடம் சிவத்தன்மை அகலாது இருக்கும் தன்மை வாய்ந்தவர் என பல நூல்கள் ஸ்மிருகள் கூறுவதை நாம் காண்கிறோம். ஆகவே இக்காலத்தில் இதற்கு எதிர்மாறாக நிகழ்ச்சிகளில் சில புல்லு நவிக் குருமார்கள் ஈடுபட்டுதங்கள் நாமங்கள் பத்திரிகை வாயிலாக பறந்தால் தமக்கு பெரும் பெயர் கிடைக்கும் புகழ்கிடைக்கும் என்று சாஸ்திர விரோதமானதும் சமயக்கட்டுப் பாட்டுக்கு அடங்காததுமான செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதுவந்து புராதினமான சைவசமய நெறிக்கும் உலகத்திற்கும் அழிவைத் தேடிட அவர்கள் வழி வகுப்பதே என நாம் மனம் வருந்த வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

முற்காலத்தில் சைவமரபில் வந்த ஆறுமுகநாவலர் சிவப்பிரகாச பண்டிதர் போன்ற பெரியார்கள் இதனைக் கண்டித்து கண்டனங்கள் தெரிவித்தார்கள். இக்காலத்தில் இதனை கண் நோக்காதமையினால் சைவத்திற்கும் வேத ஆகமத்திற்கும் வேரறுக்கும் நிலையில் சில அந்தணகுருமார் முற்பட்டு அந்தணர் என்பதை மறந்து அந்தகரமாக கிரியைகளைச் செய்வது மட்டுமன்றி மந்திா உச்சரிப்புகளையும் வேதங்களையும் மின்வேகத்தில் அமைத்து ஒப்பிடற்கரிய அரும் பெரும் மந்திரங்களை வேதங்களை அதன் பெருமையையும் சித்திகளையும் பாழாக்கி விட்டனர். இதன் விளைவே இன்று இலங்கையில் ஏற்பட்ட துன்ப நிலைக்கு காரணம் என்று கூறலாம். சைவன் என்று சொன்னால் போதாது. சமய நெறியின் வழி ஒழுகுதல் சமயதீட்சை பெறுதல் சமய அடிப்படைக் கொள்கை மூலம் வாழ்தல் மற்றவர்களை அதன் வழி வாழவைத்தல் தான் தருமம் ஆகும்.

குருமார்கள் என்று அபிஷேகம் பெற்று கொண்டாட்டம் வைத்தவுடன் அவர்கள் குருமாரவது பெரிது என நாம் வரவேற்கமுடியாது. உதாரணமாக ஒரு அந்தணர் உபநயனம் பெற்று குருகுல வாசம் செய்து கல்வி பயின்று அதன் மூலம் தன் கலாசார முறைப்படி ஒழுகி; குருவின் அனுமதியுடன் கிரகஸ்த ஆச்சிரமத்தைப் பெற்று அவருடன் சில காலம் பயிற்சி பெற்று அவர் ஆசியுடன் கிரியையை ஆரம்பித்து நடத்துவதே சாஸ்திரக்கூறு. எல்லா அந்தணரும் ஆசாரியராக முடியாது. சிவாச்சாரீய பரம்பரை வழியானவர்கள் சிவசார்ய கோத்திர உரிமை இன்ன கோத்திர காரருக்கு உண்டு எனவும் மேற்கோள் உண்டு. இவைகளை எல்லாம் களைந்து இக்காலத்தில் வியாழக்கிழமைஆசாரியபிஷேகம் பெற்றவர் வெள்ளிக்கிழமை உற்சவம் கும்பாபிஷேகம் செய்வது முறையாகிவிட்டது. இதனால் இன்று உலகத்தில் பஞ்சம்-நோய்-அரசகேடு மழைக்குறைவு கிருஷிகச் சேதம் கொலை களவு காயம் என்பன மலிந்து உலகமக்கள் வேதனைப்படும் நிலையாகி விட்டது. என்ன கொடுமை இறைவன் தான் இவர்களுக்கு புத்தி கொடுக்க வேண்டும். இப்படியான கஷ்ட நிலையில் எமக்கு விழிப்பூட்ட நன்நிலைபெற இந்த சந்திர தீபம் உதயமானது போற்றவேண்டிய தன்மையாகும்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாமூல தன்ம மெனும் தத்துவத்தின்
## வழி நின்று தாழ்ந்திடும்
# அந்தணர்க்கு நலம் கொடுக்கும் நம்பி
# சிவன்

**திருநாவுக்கரசு சுவாமிகள் திருநள்ளாறு என்னும் தலத்தில் அமர்ந்த கடவுளைப் பாடிய தமிழ் வேதம் அதனை இங்கு தருகின்றேம். திருநள்ளாறு என்னும் தலம் மிகு சிறப்புடையது நளனுக்கு சனியனுல் பிடித்த கலியெனும் துன்பம் நீங்கப்பெற்றது. சம்பந்த சுவாமிகள் இத் தலத்து அமர்ந்த பெருமானை போகமார்த்த பூண்முலையாளுடன் கூடியபடி பாடிய அதனை எழுதிய ஏட்டை நெருப்பில் வேகாது காத்திடக் கொண்ட பெருமை விளங்கியது. ஓதுங்கள் உய்யுங்கள்.**

ஆதிக்கண் நான்முகத்தி லொன்று சென்று
அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை
மாதிமைய மாதொருகூ றுயி னானை
மாமலர்மே லயனேடு மாலுங் காணு
நாதியை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப் பெற்று உய்ந்த வாறே.

ஆதியான காலத்தில் நான்கு முகமுடைய பிரமதேவருடைய தலை ஒன்று சென்று சொல்லத்தகாத வார்த்தை ஒன்று சொல்ல அதனைக் கேட்டலும் தனது கைவாளால் அவன் தலையரிந்த செல்வக்குநபரனை; தன்னையே சென்று நாம் அடைய திகைப்பும் மயக்கமும் பொருந்திய உலகில் நல்லதொரு சிவலோக நெறி ஒன்றினை இதுவேயாம் என்று வகுத்து காட்டுகின்ற கடவுளை: இமயமலையில் தோன்றியருளிய பெண் நீலநிறமுடைய பெருமாட்டியை தனது ஒரு கூறுயினனை, பெரும் தாமரை மலர் மேல் அமர்ந்த பிரமனேடு திருமாலும் தேடிக் காணுனாத எல்லார்க்கும் முற்பட்ட சோதியை என் தலைவனை திருநள்ளாறு அமர்ந்த தேவனை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறு என்ன அதிசயம் என்றவாறு.

கலிப்பெருக்கமே மிகுந்த உலகில் மங்கையரை பொருளை பொன்னை கண்டு கேட்டு உண்டு அநுபவித்து அதன் சிறுநாள் வாழ்விற்காக எத்தனையோ பொய் சொல்லி புறக்கணித்து வேண்டு மென்றுல் கொலையும் செய்து வழக்கும் பேசி வாதாடி மருட்டி வம்புபண்ணி வகை பேசி பல தந்திரம் செய்து வாழ்வதே பெரிது என நான் நினைந்த உலகில் அப்படியெல்லாம் பொய்மையை நிலையாமையை பெருக்கும் புலைவாழ்வை நீக்கி பொய் இலாத மெய் நெறியாம் தனது திருவருள்சேர் உலகிற்கே அது எங்கிருப்பது என அறியாது இருப்பேற்கு இதுதான் வழி என பூவும் நீரும் புனிதமும் சிவதொண்டுமாக வழி வகுத்து காட்டிய என் பெருமானை நான் நினைந்தேன். நினைந்து நினைந்து நெக்குருகி நின்ற பின் எனக்கு ஒரு விழிப்பு வந்தது. அது தான் நான் சங்கடம் என்னும் கடலில் நின்றும் மரணம் என்னும் கொடுமையில் நின்றுந் தப்பி உய்ந்து விட்டேன் என்றவாறு. இந்த கருத்தை இன்னுமொரு திருப்பதிகத்து சாவாமே காத்து என்னை ஆண்டாய் போற்றி என்கின்றூர்.

உலகில் எத்தனையோ மகான்கள் தோற்றினர். அவர் யாவும் இறந்தார்கள். ஆனல் இவர் இறக்கவில்லை அவர் தமது உடம்புடன் நண்ணிடற்கரிய சிவானந்த ஞான வடிவேயானர் என்பது வரலாறு. அவரும் தமது பாடலில் சிவனுடன் யான் போகின்றேன் எனப் புகன்று உடலுடன் சென்றவர். இதனை நீங்கள் என்னென்று நம்பலாம்? முடியுமோ உங்களால். சிந்தித்துப் பாருங்கள் ஏன் உங்களால் நம்பமுடியாது என்பதை அடுத்த தீபச்சுடரில் விளக்கமாகச் சொல் 1
கின்றேன்.

படையானைப் பாசுபத வேடத் தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம்
அடையாமைக் காப்பானை அடியார் தங்கள்
அருமருந்தை ஆவாவென் றநள்செய் வானைச்
சடையானைச் சந்திரனைத் தரித்தான் தன்னைச்
சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

படை ஏந்திய கையுடையவனை பாசு பத வேடம் பூண்டவனை முன்னே மன்மதனை நோக்கி எரித்தானை பாவமெல்லாம் எம் மீது அடையாமைக் காப்பவனை அடியார் தங்களது அருமருந்தாயவனை அஞ்சாதே உன்னையும் ஆதரிப்பேன் என அருள் செய்ய வல்ல அப்பனை; புரிபுன் சடையுடைய ஈசனை தக்கனது சாபத்தால் தேய்வுற்ற சந்திரன் தீங்கடையாவாறு. தன் சடை மீது தரித்து காத்தானை சங்கினிடத்து பிறந்த முத்துப்போலும் வெள்ளை இடபத்து எழுந்தருளி வரும் நடையானை என் தலைவனை நான் அடியேன் நினைக்கப் பெற்று 2
உய்ந்தவாறு.

படஅரவ மொன்றுகொண் டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞிலி மேவி னானை
அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
அமுதாக உண்டானை ஆதி யானை
மடலரவம் மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் தன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நாடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

படமுடைய பாம்பு ஒன்று கொண்டு திருவரையில் அணிந்த எல்லார்க்கும் முதல்வனை திருப்பைஞ்ஞீலி எனும் தலத்தில் இருந்தானை கொடிய வாசுகியை கைப்பற்றி தேவரும் அசுரரும் பாற்கடல் கடைந்த நேரம் எழுந்த நஞ்சை அமுதாக உண்டவனை ஆதியான கடவுளை மடலுடைய இதழ் கொண்ட வண்டு பாடும் பூங்கொன்றை அணிந்தானை: கிடைத்தற்கரிய பெருமணியாயவனை மார்க்கண்டர்க்காக இயமனை உதைத்தருளிக் கொன்றுனை திருநள்ளாற்றில் அமர்ந்தருளும் கடவுளை நான் அடியேன் நினைந்திடப் பெற்று உய்ந்தவாறின் அற்புதமே.

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோடு மிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பூசிச்
சுந்தரனுய்ச் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

கட்டங்கம் (மழுவாயுதம்) ஒன்று தமது திருக்கையில் ஏந்தி கங்கணமும் காதில் இடுகின்ற தோடும் இட்டு சுட்டஉடலின் சாம்பலை மேனி செறியப் பூசி நல்ல அழகுடைய மணவாளனுக சூலப்படை கையில் ஏந்திய கடவுளை; இறந்தாரின் தலை மாலை நிறைய தன் தலைமேல் சூடி பல பேய்க்கணமும் தாமுமாக பரந்திருந்த காட்டிடத்து அமுதத் திருநடனம் ஆடுகின்ற பெருமானை திருநள்ளாற்றில் அமர்ந்த தெய்வத்தை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறு என்ன அதிசயம் என்ற வாறு. 4

உலந்தார்தம் அங்கங்கொண் டுலக மெல்லாம்
ஒருநொடியி லுழல்வானை உலப்பில் செல்வம்
சிலந்திதனக் கருள்செய்த தேவ தேவைத்
திருச்சிராப் பள்ளியெஞ் சிவலோ கனைக்
கலந்தார்தம் மனத்தென்றுங் காத லானைக்
கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை
நலந்தாங்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

இறந்தாருடைய அங்கங்களாய மண்டை ஓடு எலும்பு இவை அங்கமாக அணிந்து கொண்டு உலகம் எல்லாம் ஒரு நொடியில் உழன்று வரும் பெருமானை குறையாத செல்வத்தை அன்று தனக்கு வலைப்பந்தரிட்ட சிலந்திக்கு அருள் செய்து கோட்செங்கட் சோழனுக பிறப்பித்தானை தேவதேவனை திருச்சிராப்பள்ளி என்னும் தலத்து அமர்ந்தருளிய சிவலோக நாதனை அவனையே கலந்திருக்கும் மனமுடைய புண்ணியரை என்றும் காதலிப்பானை திருக்கச்சி ஏகம்பத்திருப்பானை வாசனை நிறைந்த பூவான கொன்றை மலரின் நலத்தினைத் தாங்கிக் கொண்ட என் தலைவனை திருநள்ளாற்றில் அமர்ந்த எம் தெய்வத்தை சிவனை நான் அடியேன் நினைந்திடப் பெற்று உய்ந்தவண்ணம் எவ்வண்ணமோ.

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென் னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

குலப்பெருமையால் கொண்டுள்ள அகந்தை அழுக்காறு முதலனைத்தையும் கெடச் செய்து அதனுல் வரும் குறை அனைத்தும் நீக்கிட வல்லமை உடையானை; குலமலையெனும் இமயத்து தோன்றிய நித்திய கன்னியான உமையை இடப்பாகத்து வைத்த பெருமானை என்னைப்பற்றிய மலம் எல்லாம் கெடுத்த கருணை என்னும் பெரும் தீர்த்தத்தில் ஆட்டிக்கொண்ட அறவாழி அந்தணனை இளம் பிறை தவழ்வது போலும் சிறந்துற்ற செஞ்சடையினனை; சஞ்சலம் யாவும் அகற்றி தயவினை மூலமாகக் கொண்டு தருமமே பொருளாக விளைத்து நின்ற தத்துவத்தின் வழி ஒழுகி நின்று தாழ்ந்து வணங்கிடும் அந்தணர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் தலைவனை திருநள்ளாற்றில் அமர்ந்த தெய்வத்தை நான் அடியேன் நினைக்கப் 6
பெற்று நலம் பெற்றவாறு நன்று.

பூவிரியும் மலர்க்கொன்றைச் சடையி னானைப்
புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் தன்னை
மறைக்காடும் வலிவலமும் மன்னி னானைத்
தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ்
சிதைத்தானை உதைத்தவன்றன் சிரங்கொண் டானை
நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

தொடர்ச்சி 5—ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தயாமூல தன்மம் ....

4-ம் பக்கத்தொடர்ச்சி

பூவின் இதழ் விரியும் கொன்றை மலரைச் சடைமீதணிந்தவனை திருப்புறம்பயம் என்னும் கோவிலில் குடி கொண்ட எம்பெருமானை திருப்புகலூர் அமர்ந்தருளிய புண்ணியனை அச்சம் அகல பெருயானை யைத் தோல் உரித்த கடவுளை திருமறைக் காடும் திருவலிவலமும் என்னும் தலங்களில் பொருந்தி இருப்பானை தேவர்கள் ஓடிட அகந் தையுடன் திகழ்ந்த தக்கனது யாகம் எல்லாம் சிதைத்தருளி அவனை உதைத்து அவன் தலை வெட்டி ஆட்டுத்தலை வைத்தானை நாவால் சிறந்திட வேதம் சொல்லி உய்யவைத்த திருநள்ளாற்று அமர்ந்த ருளும் தெய்வத்தை சிவனை நான் அடியேன் நினைக்கப் பெற்று ய்ந்து கொண்ட பெருவாழ்வு பெருமையாயது. 7

சொல்லனைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கும் மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேதம் நான்கும்
கல்லாலின் நீழற்கீழ் அறங்கண் டானைக்
காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

சொல்லாகி நின்றானை சுடருடைய பவளத்தின் ஒளியானானை முன் னைய அசுரது புரங்கள் மூன்றும் எரிந்திட அழித்தவில்லுடைய பெரு மானை எல்லார்க்கும் மேலாகிய கடவுளை மெல்லிய இயல்புடைய அம்மை அவள் பாகனை வேதங்கள் நான்கினையும் கல் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து அந்த வேதத்தின் அறத்தினை உணர்ந்து உரைத்தருளி னானை திருக்காளத்தி மலைமீது இருந்த சுடரை திருக்கைலாய மலை மீது இருந்த மிகு நல்லவனை என்தலைவனை திருநள்ளாற்றில் அமர்ந்த என் தெய்வத்தை நான் அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்த நன்மை யாம் தன்மை வாய்த்தவாறு. 8

குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக அவுணர்புரம் மூன்றும் வேவ
ஆரழல்வா யோட்டி யடர்வித் தானைச்
சென்றாது வேண்டிற்றென் றீவான் றன்னைச்
சிவனேயெம் பெருமானென் றிருப்பார்க் கென்றும்
நன்றாகும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

குன்றாத நெறியுடைய பெருமுனிவன் சாபம் நீங்குமாறு சிலம் பணிந்த சேவடியால் இயமனை உதைத்த கடவுளை அன்று ஒரு நாள் அசுரது புரம் மூன்றும் வெந்திட கொடிய நெருப்பாய அதனைச் செலுத்தி அவற்றை அழிவித்த கடவுளை; அவனை அடைந்து யாது வேண்டினாலும் அது ஒன்றினை கொடுத்தருள்வானை ஏதும் வேறு ஒரு நினைப்புமின்றி சிவனே எம்பெருமான் என்று இருப்பார்க்கு என்றும் நின்றாகும் எம் தலைவனை திருநள்ளாற்றில் அமர்ந்த தெய்வத்தை நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறு என்வகை என எண் ணவும் ஆமே என்றபடி. 9

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி இன்னிசைகேட் டிரங்கி மீண்டே
உற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

இறவாத வரம் பெற்றேன் என்று மிக்க அகந்தை உற்ற இரா வணனை அவனது இருபது தோளும் மலைக்கீழ் கிடந்து நெரிந்திட திருப்பதா விரலால் ஊன்றி அவனது இனிய இசைகேட்டு இரங்கி மீண்டும் அவனுக்கு உற்ற பிணி எல்லாம் தவிர்த்தருள வல்லமை உடைய கடவுளை; அவனை மறவாத அன்பரது மனத்து என்றும் பொருந்தி இருந்தானை பெரிய இளம்பிறையும் கொன்றை பூவும் வன் னியும் ஊமத்த மலரும் விளங்கிடும் தேன் துளிக்கும் செஞ்சடை உடைய பெருமானை திருநள்ளாற்றில் அமர்ந்த செல்வனை நான் அடி யேன் நினைக்கப் பெற்று உய்ந்தவகை அற்புதமே. 10

---

## அந்தணர் பெருமை...

3 ம் பக்கத் தொடர்ச்சி

யம் தருமம் தவம் ஆவனவாகும். ஆனால் அதை விடுத்து இருளைப் பெருக்குவார்க்குத் தான் பொன் பொருள் வாகனம் வீடு உடை என்ற இத்தியாதி பொருள்களில் நாட்டம் கொள்ளும். அதாவது அருளை நாடுவது என்றால் ஓர் மலையின் மீது ஏறிமேல் போவது போன்ற சிரமமுடையதாகும். ஆனால் உலக பந்தங்களில் விரும்பிக் கொள்வது மேல் நின்றார் கீழ் இறங்கும் தன்மை போன்றது. அப்படி அல்லாது இத்தகைய பந்தப்பொருள்களாய இவற்றினைப் பெற்று அநுப வித்து இன்புற்றுக் கொண்டு நீவிர் வைதிக நெறியின் அருள் பெருக்கையும் பெறுவீர் பெற முடியும் அல்லது பெறுகின்றீர் என்று யாரேனும் துணிந்து சொல்லமுடியாது. அப்படிச் சொல்வார் உண்மையில் தம்மை யும் ஏமாற்றி சாஸ்த்திரத்தை யும் ஏமாற்றி சனங்களையும் ஏமாற்றுவாரே ஒழிய வேறு அவர் யாதும் சிறப்புறப் பெறமாட் டார். ஆலை இல்லா ஊருக்கு இலப்பூச்சக்கரை என்ற ஒருபழ மொழிபோல நல்விளக்கமிலாத அந்தணர் இல்லாத இடத்திற்கு ஏதோ ஒரு அந்தணர் எந்நிலை யில் உள்ளாரும் வேண்டும் என் ற அளவிற்கே நாம் வந்துள் ளோம்.

அடுத்து இன்றைய உலகில் அந்தணர்களிடம் மட்டும் நாம் குறைகாண முடியாது. பெரும் பாலும் ஏன் முழுவதும் சைவ மக்கள் எனப்படும் எல்லா வரு ணத்திடையுமே வேதநெறியின் வழிவந்த ஒழுக்கம் இல்லவே இல்லை. முழுவதும் அவர்கள் மேற் சொல்லிய பந்தப்பொருட்களின் மேல் இன்னும் பெருக் கொண்டாரே ஒழிய உண்மை யில் பாசத்தை வேரறுத்துக் கொண்ட கருணை வடிவான வஞ்சம் நீங்கிய ஓர் உத்தமர் களை இலங்கை நகரில் காணும் நிலை அரிதாகிக் கொண்டது.

எல்லாரும் உத்தியோகம் கார் வீடு மதிப்பு சிறப்பு விந மான வானொலிப் பெட்டி வீட் டில் ஒன்று காரில் ஒன்று மேல் மாடியில் ஒன்று அடுத்து அவர்களது மனைவிமாரின் உல் லாச உடை பாவனை மிடுக்கு மேம்பாடு இவை அனைத்தையும் பெருக்குதலே நமக்கு வேண்டிய சிறப்பு இல்லாதிருந்தால் சிறப் பில்லை. இதில் நம்பிக்கைகுறைந் தவன் மடையன். பேயன். இதற் கு எந்த சாமியினது காலில் விழுந்தாலும் நாம் அடைவோ ம் இதை என்று தங்களுக்குள் மோகித்து நின்று அதற்காக காவிச் சட்டை சாமி மாரின் பின்னால் பஜனை பண்ணித்திரி ந்தால் வேதவழி எங்கு சிறப்பு றுவது.

உண்மையை நாம் சொல்லப் போனால் வேதவழி முறையாக கருமம் செய்யும் உத்தமராம் அந்தணப் பெரியோரை பெரும் பாலும் கலியினால் மிகுந்தமக்கள் கவனிக்கார். கொஞ்சம் தூரத் தான் வைப்பார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆ னால் அதற்காக மக்கள் விரும்பு கிறார் என்பதற்காக சாஸ்திர சம்மதமில்லாதவற்றைப் புரிந்து எமது வேத நெறியை பங்கப் படுத்தல் தகாது.

இன்றைய நிலையில் சிவனருட் செல்வத்திற்கே தம்மை அர்ப் பணித்த அந்தணர் குடும்பம் அதன் நிலை என்ன? அவர் களும் விரும்புவார் தானே. ஏன் இவர்கள் எல்லாரும் இந்த சுகங்களை அநுபவிக்க நாம் மட்டும் இச்சுகங்கள் இன்றி வேதநெறி ஒழுகிமக்கள்மதிப்பும் இல்லாமல் வருவாயும் இல்லா மல் மாண்பு கெட்டு சும்மா இருப்பதா என்ற எண்ணம் எழவும் கூடும். இத்தகைய மனத் தாக்கல் எழாமல் தான் அந்த ணர்களது பிறப்பிற்குரிய ஒழுக் கம் கைகுடுத்து உதவுகின்றது. இந்த பிறப்பு ஒழுக்கம் மாசு படாது சந்ததி சந்ததி தோறும் வருவது. ஒரு அந்தணரது தாய் வழியும் தந்தை வழியும் தவறின் றி ஏதும் ஒரு வடுவும் பெறாமல் ஒழுகி வந்தால் அந்தச் சந்ததி யில் வேத நெறி எக்காலமும் கெடாது. இதனை நக்கீரதேவர் இருவர் சுட்டிய பல்வேறு தொல் குடி எனச் சொல்கின்றார். இந்த தாய்வழி தந்தைவழி தூய்மை நிறைந்து ஒழுங்குடன் வாழ்ந்து வந்த குலத்தில் வந்தவரித்த அந்தணர்கள் அவர்களது செ யல் ஒழுக்கம் வேத நெறி அனை த்தும் மாசில்லாதிருக்கக் காண் கின்றோம். அவர்கள் தூய்மையு டனே இருக்கின்றனர், அடுத்து இந்த அந்தணர்கள் காலை மா லை என்னும் இரு சந்தியும் ஒதி சடங்கறுப்போர்கள் என்று திரு மூலர் சொல்கின்றார். சடங்கறுத் தல் என்பது தமது வேதநெறி ஒழுக்கங்களைத் தவறின்றிச் செய் தல் என்பதாகும். உலகியல் சுகங் களான மிலேச்ச நாகரீக பொன் பொருள் உடை நடை உத்தியோ கம் யாவும் கலியின் பெருக்கம் எனப்படும்.

இந்தக் கலிதான் பெரும் துயரினை உலகில் விளைவிப்பது. கலி என்பதன் பொருள் ஆ சைப் பெருக்கத்தால் மக்கள் தருமத்தை மறந்து கொலை வஞ் சனை சூது வாது காமாதி குற் றங்களைப் பெருக்குதல். இந்தத் துயரங்களை உலகில் பெருக்காத வாறு தடுப்பது அந்தணர் செய் யும் யாகங்களின் ஆகுதியாகும். இந்த யாக அக்கினியின் விளைவு தான் அந்தணர் தம் மிடத்து கொண்ட பெரும் அருட்செல் வமாவன. இதனை மூன்று வகை யான அக்கினி என்று சொல் வார்கள் ஆகவனீயம் தக்கிணாக் கினியம் தாருச பத்தியம் என வாகும்.

இந்த அக்கினிகளை புறத்தும் வளர்த்து அகத்திலும் தமது உடம்பிலும் அதன் தத்துவ விளை வுகளை அந்தணர் பெறுவார்கள்

ஆதலால் இவர்கள்முத்தீச்செல் வர் எனப்படுவர் உலகில்சுபிட்சம் நிலவவேண்டும் என்றால் உண் மையான ஒரு வேதவழி ஒழுகும் அந்தணர் ஓர் ஊரில் இருந்தால் அந்த ஊரில் தீங்கு நெறிபரவா து. இன்றைய மிலேச்ச நாகரீகத் தில் அழுந்தி தடித்து அதனினின் றும் விடுபடமுடியாத மக்களால் இதனை உணரமுடியாது. அதனா லே உண்மைஅந்தணர் வாழ்க வெனசம்பந்தரும் கூறினார்.

உண்மையில் ஓர் நற்கோத்திர அந்தணப் பிள்ளையிடத்து நன் மையை வளர்த்திட விரும்பினால் அது பெருமை விளங்கிய குரு வுடன் ஆச்சிரம வாழ்க்கை நடத் துதலினால் தான் அமையும் இ தனை பெரிய புராணத்து ஆசிரி யர் தன்னுள்ள அருள் தொடர் புடைய நற்பண்பை மாணவர் களிடம் அந்தாமியாக நின்று அருளூறப்பண்ணுவதே குருகுல வாசம் எனப்படுவது என்கின்றார் இத்தகைய மடங்கள் நாட்டில் முன்னர் காலங்களில் பல இடங் களிலும் காணப்படும். என்கின் றார் சேக்கிழார் அந்தணர்கது மேன்மையை பெரிய புராணம் செல்வது போன்று வேறெந்த தமிழ்த் திருமுறையும் சொல்ல வில்லை. வேதநெறியையும் சை வத்தையும் விளங்க வந்ததொ ரு நூல் பெரிய புராணம் ஒவ் வொரு அந்தணருமே இந்த பெ ரிய புராணத்தை கற்றாலே அ வர் இடம் அருளாய திருவை இந்த நூல் பெருக்கு விக்கும்,

இன்னமும் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று தனது நெறி தவறி ஒழுகும் அந்தணர் களைப் பற்றியும் அதல்லாது உண் மையான உத்தம நெறியுடன் வாழும் அந்தணர் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ளும் வழி யாக இதனைக்கீழே காணுங்கள்,

இதனை திருமூலர் சொல்கின் றார் மந்திரம் (83) (7 ம் பக்கம்) "அந்தணர் ஆவார் வேதநெறி ஒழுகும் அந்தணர் அவரே உண் மையான அந்தணர் ஆவார் ஆனால் அந்தணர் என்பார் சிலர் தம்முடைய வேதாந்த ஒழுக்கத் தில் குறைவுடையோராய் தன் னுடைய விசெயலை வெல் கோ லாகலமாக பிறர் மெச்சும்படி செய்தால் அவரை நாம் வேத நெறி தெரிந்த அந்தணர் என்று சொல்லுவோமா?" இனி 84வது மந்திரத்தைப் பாருங்கள் (7 ஆம்) பக்கம் அதில் காணப்படுவது.

(தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவும் வானொலியும் தீங்கினையே வளர்க்கும்

## அன்பு நெறிக்கும் அருள்நெறிக்கும் அல்லல் தருவன

எக்காலமும் உங்கட்கு ஒரு தெய்வ உறுதியைப் பெற்றுக் கொள்ளவேண்டு மென்றால் அதற்கு என்னால் மொழிந்திடக் கூடிய ஒன்று உண்டு. அதுதான் உங்கள் அனைவர்க்கும் சினிமாவும் வானொலியும் தீங்கானதே! இவைகளில் நீங்கள்பங்கு கொள்வதே அன்றி அதன் மூலம் தெய்வீகப் பாடலையோ அல்லது தெய்வீக காட்சிகளையோகேட்பதென்றால் பார்ப்பதால் உங்களிடம் நீங்கள் பெருக்கிக் கொள்ளும் அருள் தன்மையை அவை குன்றுவிக்கும். அதன் பின்னுக அருள்நிலை யைப்பெற்றுக்கொள்ளல் மிக அரிது.

ஏன் அப்படிச் சொல்கின்றிர் என்று கேட்டால் பெரியோர்களது துணிபு சீலம் இல்லாத பொர்ருளை அது ஒரு வேளை சீலமுடைய தாக ஒருபாட்டு ஒரு காட்சியை சித்திரிக்குமேயானல் அதன் அத்திவாரம் உண்மையில் சீலமில்லாத அல்லது சீலத்தைப் பெருக்கிக் கொள்ளாத தாக உள்ளதுறையில் அமைவதால் பொய்மையில் உள்ளதும் மெய்போல வந்தாலும் அந்த மெய்யும் பொய்மையே யாகும். என்பது துணிபு இதனை சிந்தியுங்கள்.

எங்களது தூய கொள்கைப் படி தூய்மை என்பது முற்றிலும் உயிரின் மலபந்தம் அற்ற (அதாவது அழுக்காறு அவாவெகுளி இன்னச் சொல் பெருமிதம் துர்நடத்தை இவையற்ற) ஓர் கொள்கையாகும். அடுத்து இயந்திர சாதனங்கள் எவையும் தூய்மை அற்றவை. அவை புண்ணியப் பொருள் அல்ல. இயந்திரங்களில் எங்காகிலும் உயிர்த் தன்மை உண்டு என நீங்கள் சொல்வீரோ! காண்பிக்க அல்லது நீரூபிக்க முடியுமா?

ஓர் உதாரணம் மட்டும் சொல்வேன் நீங்கள் அயலில் ஒழுங்காக பூசை நடக்கின்ற நல்லதொரு ஆலயம் செல்லுங்கள் வணங்குங்கள் அங்குள்ள வீண் பிரச்சனைகளில் பங்கு கொள்ளாது நேராக உமது இல்லம் சேருங்கள். அப்பொழுது உங்கள் மனதில் தோன்றும் எழுச்சியையும் அவதானித்துக் கொண்டு சினிமா பார்க்கவிரும்பினல் அங்கு போய் ஒரு தெய்வக் கதையுடைய படத்தைபார்த்து விட்டு வந்து உங்கள் மனதின் நிலையைப் பாருங்கள். அடுத்து வானொலியில் தெய்வப்பாடல் கேட்கின்ற போது அதனையும் கேட்டுப் பாருங்கள். எது உயர்வானது என்பதை நீங்களே! தெளியுங்கள்:

யாருக்கும் தெரியாது சானாளும் வாழ்நாளும். ஆகவே இந்த ஒரு சந்தர்ப்பத்தில் நல்ல ஒரு நிலையை நாம் பெறப் பக்குவப் படுத்திக் கொண்டு வாழ்தல் நலம். அதற்காகத்தான் மக்கள் சமுதாயத்து இருக்கும் போது பல அல்லல் தரும் சுகதுகங்களில் கலந்திட நேரும் என்று பெரியோர்கள் தனிமையை நாடிச் சென்றுள்ளனர். தனிமை சீலமுடைய வாழ்க்கைக்கு உதவியாகும். ஆனல் இல்லறத்தில் இருக்கவிரும்புவார்க்கு மனம் சிற்சில வேளை சங்கடப்பட்டு அமைதி காணமுடியாது ஒருகால் றேடியோ கேட்கவோ அல்லது சினிமாவுக்கு போகவோ அல்லது கூத்துப் பார்க்கவோ அவாவும். அதில் பிழை இல்லை என்றும் அந்தமனம் எண்ணுவிக்கும். ஆனல் அதன் தன்மையினை நாம் நினையப் போனல் சிரங்கு சொறிஞ் சமாதிரியாகவே இருந்திடும். அத்தகைய சினிமா வானெலி அல்லது சங்கிதக்கச்சேரிக்குப் போனல் உங்கள் பால் விளையக்கூடிய தீங்கு நிலையைச் சொல்லப் போனல். உங்களது ஆத்மீகவளர்ச்சியையும்அருள்நெறியையும்குன்றுவிப்பதாகும். நந்தப் பழக்கம் அது முற்றிலும் இன்னம் இன்னமும் மனதில் அழுக்கு பெருகிக் கொள்வதன்றி மனதின் அருள் தன்மையினை பெருக்க வாய்ப்பு வராது.

ஆகவே சீலமுடைய பொருளாவன வேதம் ஓதல்; அல்லது துறவுநெறி பூண்ட பெரியாருடன் பழகுதல்; அல்லது அது இல்லாத நேரம் ஆருடைய பசுவுக்கு என்றாதால் புல் செருக்கிப் போடுதல் கோவில் வீதியை துப்பரவு செய்தல் அல்லது உங்கள் வீடுவாசலை நீங்கள் துப்பரவு செய்தல் நலம்.

இந்தவகை நீங்கள் உண்மையில் வானெலியை வைத்து வீணன பாடலைக் கேட்டு உங்கள்அருமந்த நேரத்தை போக்காட்டாது அல்லது சினிமா வைப்பார்த்து உங்கள் அருமந்த நேரத்தைப் போக்காட்டாது உண்மையான தெய்வக்கதைகளை நீங்களே படித்து இன்புறுங்கள். ஆநந்தவிகடன் கல்கி கலைமகள் குண்டூசி குமுதம் அரசியல் வம்பு அளக்கும் பத்திரிகைகள் இவைகளைப் படிப்பதும வீணன காலங்களே. இவை உண்மை இதனை நான் உறுதியுடன் சொல்வேன். இதனை நான் சொல்லும் போது தவறுகச் சொல்லவில்லை. இன்றைய உலகில் மக்களை நல்வழியிலாது தீய வழியில் போவதற்கு தவறுன கற்பனைக் கதைகளை குரோத மனப்பாங்கை வஞ்சனையால் மிகுந்த கட்டுரைகளைக் கொண்டு பாவவழியினைப் பல பத்திரிகைகள் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. இப்பத்திரிகைகளை படிக்கும் போது உருசியாக இருக்கும். ஆனல் அக்கதைகளில் குரோதம் வஞ்சம் பெருக்கிய கற்பனைகளில் கலகப் புதினங்களில் வாசிக்கும் போது பற்றிக் கொண்ட மனம் அழுக்கேறி மீளவும் துன்பத்திற்கே வித்தாகி குரோதத்துடன் வஞ்சனையுடன் காம இன்பத் துடன் நீங்களும் இழுபட்டு அதனல் பகை பழி விரோதம் இவற்றைப் பெருகிக் கொள்ள நேரிடும். பிறகு சிரங்கு சொறிஞ்சால்புண்ணுக்கிபின் வேதனையைத் தருவது போன்று உங்கள் மனதை மீண்டும் துன்ப வழிக்கே இட்டுச் செல்லும். இன்னமும் இந்தவகை முழுகக முழுக்க கற்பனைக்கதை மூலம் காமஇன்பப் பெருக்க மூலம் காசினைவாரி காண்பாரை கேட்பாரை சிறு நெறிக்கே இழுத்து விடும் இவை ஒருகால் நனமை போலத் தோன்றினலும் அது உண்மையான பொருளோ சிந்தியுங்கள்.

வானெலியும் சினிமாவும் மாண்பு நெறிதராத பத்திரிகைகளும் மனத் தூய்மையைக் கெடுப்பன என்பததே முக்கிய காரணமாக அதை நீக்குதல் நலம்.

இவைகளில் பெரும் பாலும்சூதே மலிந்திருக்க நாம் காண்கின்றோம். ஒரு வருக்கும் ஒருபிரயோசனம் ஒரு வழியிலும் தராது சும்மா இருந்து கேட்டு சிரிக்க பார்த்துச் சிரிக்க நாடகங்களை அமைத்து அதுவும் கன்னியர்களது இளைஞரது காதல்பற்றிபேசி நக்கல் பண்ணி சிரிக்க வைக்கும் கருவியில் ஒரு கால் தேவாரம் ஒன்று பாடினல் அவை நல்லது என்று நினைக்கின்றீர்கள் இராமலிங்கசுவாமிகள் ஒரு இடத்துஒருமையுடன் உனது திருவடி நினைக்கின்ற உத்தமர் உறவுவேண்டும் என்கின்றார். அந்த உத்தமர்யார் அதை தெளியுங்கள். அப்படியானல் அவர் வாயிலாக வரும்பாடலை நேராக கேட்டு அருள் எய்தல் நலமோ. ஒன்றுக்கும் உதவாத இக்கருவியில் கேட்டு நலமுறலாமோ? யாரேனும் ஓர் அருள் உடைய உத்தமர் தாமும் றேடியோ கேட்டு சினிமாவும்பார்த்து வேடிக்கையும் வீம்பும் அளக்கும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் படித்து தான் அருள் எய்தினர் என்று இலங்கை இந்தியா அல்லது இந்த உலகம் எங்கும் இருப்பார் யாரேனும் சொல்ல முடியுமா?

ஆகவே உங்கள் யாவரிடமும் அறிவிருக்கின்றது, அந்த அறிவை நன்கு பயன் படுத்தி வாழ்தல்நலம். அருணகிரியார் இதைப் பற்றி ஓர் பாடல் சொல்கின்றார். இதோ அதன்பொருள்;-

''கிழியும் படி கிரவுஞ்சமலையாக இருந்த அசுரனை கொடுமை விளைத்தபாதகனை வேல்விடுத்து கொன்றருளிய பெருமானுடைய பாடலை கதைகளைப் படித்து கேட்டு உருகி நன்மை படுவதல்லாது இழிந்த கதைகளைப் புதினத்தை படித்து வீண்பொழுது போக்காது இருங்கள். ஏன் என்றால் இந்த உலகமக்களுக்கு தெரியாது இறந்த பின்பு இந்த உயிர் பிரிந்து போய் நெருப்பான தன்மை போன்ற நரகக்குழியில் கிடந்து அவதி உறுதலும் அல்லாமலும் போகும் போது தண்ணீா விடாய் கொண்டு இயமனுடைய ஊருக்குச் சென்றிடும் போ துற்ற துயரும். அந்த வழிகளில் உள்ளதுயரம் பற்றி மறந்த மக்களுக்கு சொல்லுங்கள் என்கின்றார். அவர் சொல்வதை அத்திவாரமாக் கொண்டு நானும் இதனை வெளிப்படையாக உறுதியுடன் மொழிகின்றேன். நீங்கள் என்னை எப்படி நினைத்தால் என் எனஎன்ன செய்வித்தால் என்ன எனக்கு ல்லாம் சரி, அடியேனுடைய ஒரே ஒரு விருப்பம் தொன்று தொட்டு இவ்வுலகில் வந்த பெருமக்கள் அனைவரும் பேணிக்காத்த வேத நெறி தழைத்தோங்க வேண்டும்.

'' வாழ்க வேதநெறி அதன் மிகுந்த சீலமுடைய சைவநெறி தழைத் தோங்கி வாழ்க''

---

## அந்தணரும் அவரும்...

4 பக்கத் தொடர்ச்சி

''உண்மையான அன்பின் அருள் தன்மை கொண்டு அரிப வேதத்தின் எல்லையாம் பரத்திடத்து சிந்தை கொள்கின்ற அந்தணர் இருக்கும் இருப்பிடம் ஏதும் குறைவடைவதில்லை, அங்கு வாழும் மக்களும் நன்றாகும் அரசனும் நன்றாகும், ஆகையால் அந்தியும் சந்தியும் தவறாது அருள் ஒளியாய சிவனுக்கே ஆகுதியினைச் செய்யுங்கள் இதையும் சிந்தியுங்கள், தெளியுங்கள்.

ஆதலால் இப்படியாக எமது வைதிக நெறிபங்கப்பட்டு தவறினமைக்கு காரணம் தவக் குறைவும் விளக்கக் குறைவுமாகும். ஆகையால் இத்தகைய பெரியோரது அறவுரைகளை இகழாது உணர்ந்து தெளிந்து எமது உலகம் வாழ்வு பெறுவதாக. அனைத்துலக சைவமக்களே போனவற்றை நினைந்து கொள்ளாது இனியாகிலும் வேத நெறியை வளர்க்க முற்படுங்கள்.

---

## தீபத்திற்கு மற்றுமோர் ஆசி

வட்டுக்கோட்டை கிழக்கு
சித்தன்கேணி
12 1 78

அன்பர் பெருந்தகை திரு வை. நல்லையா
அவர்கட்கு.

இறைவன் திருப்பெருந்துறையில் மணிவாசகப் பெருமானைத் தடுத்தாட் கொண்டான் தாங்கள் என்னை ஒழுங்கையில் நிறுத்தி பழத்தைப் பிழிந்து சாறுமாக உண்ணக் கொடுப்பது போன்று தாங்கள் கற்ற நூற்பயனை யெல்லாம் இலகுவில் நாமும் படித்து இன்புறவும் பயனடையவும் சந்திர தீப மென்னும் பத்திரிகை எழுதி பிரசுரித்து நேரில் சந்தித்து கையளித்த தங்கள் தொண்டு வளர திருவருட்டுணையை வேண்டுகிறேன்.

(ஒப்பம்)
இங்ஙனம்
தங்களன்பான
சு. இரத்தினம்
(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் ....

2-ம் பக்கத் தொடர்ச்சி

திருவுடைய நெறியாகிய சித்து அசித்து இல்லாமல் குருவினுடைய நெறியாலே குருவினுடைய துருவடிப்பதம சேர்ந்து தாம் செய்யும் கருமங்கள் நியதி ஆகியவற்றை கைவிடாது விட்டு யாவும் அறிகின்ற துரிய நெறியாகிய சமாதியை அடைவார்கள் தூய வேதநெறி ஒழுகும் அந்தணர்கள். 82

மறையோ ரவரே மறையவ ராஞல்
மறையோர்தமவேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்று
அறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.

அதந்தணர் ஆவார்வேதநெறி ஒழுகும் அந்தணர் அவரே. உண்மை வேத வழி ஒழுகினுல் உண்மையான அந்தணர் ஆவார். ஆஞல் அந்தணர் என்பார் சிலர் ம்முடையவேதாந்த ஒழுக்கத்தில் குறையுடையோராய் தன்னுடைய செயலை வெளியில் கோலாகலமாக பிறர் மெச்சும் படி செய்தால் அவரை நாம் வேதநெறி தெரிந்த அந்தணர் என்று சொல்லுவோமா? 83

அந்தண்மை பூண்டஅருமை யந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்ருகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

உண்மையானஅன்பின் அருள்தன்மைகொண்டு அரிய வேதத்தின் எல்லையாம் பரத்திடத்து சிந்தை கொள்ளுகின்ற அந்தணர் இருக்கும்இருப்பிடம் ஏதும் குறைவடைவதில்லை. அங்கு வாழும் மக்களும் நன்ருகும். அரசனும் நன்ருகும். ஆகையால் அந்தியும் சந்தியும் தவருது அருள் ஒளியாய சிவனுக்கு அந்தணர்களே ஆகுதியினைச் செய்யுங்கள். 84

## ஆகுதி வேட்டல்

வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.

வேதத்தின் முதலுணர்ந்து சித்தத்து சஞ்சலமிலாத திடம் கொண்ட அந்தணர் ஆகுதி புரிந்தால் அதனுல் வசையில்லாத உண்மைப் பொருளும் வானுலகும் பூமியும் திக்குகளும் திக்கெங்கும் நிறைந்த தேவர் கூட்டமும் நன்மையைத் தரவல்ல நிலைமையும் எங்கும் பெருகும். 85

ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே.

ஈசன் சிவனுக்கே ஆகுதி கொடுத்து யாகம் புரியும் அரிய வேதவழிவந்த அந்தணர்கள் தாம் செல்லவேண்டிய அருட்கதியினை நாடி இன்பமாம் அமுதுபெற்று புறத்தும் அதனை அறியாதார்க்கும் அனுபவித்திடும் படி அருளாய அமுது புறத்தும் கொடுத்து தாமும் அருளாய அமுதம் உண்ணுவார். தாமே விதிவழி ஒழுகுதலை வேண்டித் கடைப்பிடித்து அதன் வழி தலைப்பட்டு உண்மையான நெறியை தமது அறிவாலே அடைந்து கொண்ட வரலாறு அற்புதமாவது. 86

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொருளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே.

தம்மை அணைந்தார்க்கு அருள்வழி காட்டும் அணையாயும் துணையாயும் அறியும் பற்றினை நீக்கிய பாங்கிஞல் தானே தமக்கு நற்றுணையும் நல்லசுற்றமுமாக உள்ள அந்தணர்கள் தாம சுருக்கு சுருவம் கொண்டு பசு வேட்டு (ஆன்மா) அக்கினி வளர்த்து அந்த அக்கினியாய சிவமே தமக்கு அணையும் துணையாகக் கொண்டு அதின் உட்பொருளான என்றும் தமக்கு இணைந்த துணையான எல்லாம் அமைதியான கரணங்களாயவையும் ஒடுங்கும் பெரும் பொழுதாய ஜாமத்தில் சஞ்சாரம் செய்யும் பொழுது அதுதான் வேறு துணையாவும் அணைய வேண்டாத பெயரிதொரு நெறியாகும். 87

தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனுய்
ஒமேவும் ஓரா குதிஅவி உண்ணவே.

நான் எனது எனப்படும் அகப்பற்று இரண்டும் விடும் எப்படியெனில், அவை இரண்டும் கொண்ட நான் என்பதை எப்படி விடுவது என்ற ஏதும் ஒன்றை நாடாது: பூவில் இருக்கும் நான்கு முகமுடைய பிரமதேவன் முதலிய கடவுளர்க்கும் புண்ணிய போகனுய சிவன் திருவடி நினைந்து வேருேந நினைப்பு மிளிர அவன் பால் புரியும் அன்பினுல் ஒருமையுடன் புரிந்த யாகத்து இடப்பட்ட அவி ஒன்றை அச்சிவன் உண்டிட.

அப்பன் சிவன் பால் புரியும் ஆகுதி அன்பில் நிறைய நீக்கமுடியாத அகந்தை முதல் அனைத்துப் பற்றும் நீங்கும். ''நாமறும் பொருள் நல்கிடும் எந்தை'' என்கின்ருர் கச்சியப்பர். 88

நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரு மத்தின மாம்என்றுஞ்
செய்நின்ற செல்வம் தீயது வாமே.

நெய்விடப்பட்டு எரியும் சிவாக்கினியான பொருளாம் நெடும் சுடரின் வழி சென்று ஒழுகி அத்தன்மையாக மூலாதாரத்தில் எழுந்த அக்கினிவழிச்சென்று நற்பொருளைஉண்டுபண்ணி அதனுல் தீமைஎரிந்திடும்வகையினை அறிவார்க்கு அவரது அகஇருள் அகலும். அத்தன்மையான வாய்ப்பு வந்துற்ற அத்தினமாம் என்றும் செப்பமாக நின்ற செல்வம் வந்தநாள், ஆதலின் அந்தணர்க்கு அழிவிலாத செல்வமாவது தீயாகும். இதனையே முத்தீச் செல்வத்து இருபிறப்பாளர் என பிறநம் கூறியுள்ளார். முறையாக ஆகுதி வேட்கும் முறையினை குரு சீடமுறையால் பெற்ற அந்தணர்க்கு நிகரில்லை என்றவாறு. 89

பாழி அகலும் எரியுந் திரிபோலிட்டு
ஊழி அகலும் உறவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.

பெரிய அகல விளக்கினைப்போல காணப்படும் வேள்விக் குண்டமும் அதில் திரிபோன்ற சமித்து என்னும் எரிபொருளை இட்டு சிவாக்கினியினை வளர்த்து சிவனுக்கு வேள்வி செய்திட தமக்குற்ற நோய் பல அகன்று அழியாத ஊழிக்கால ஆயுள் பெருகும். வாழ்வு செய்திடவல்ல அந்த ஓமாக்கினி உதித்திட அந்த நோய் பலவுடன் இருவினைப் பற்றும் கழியும். எவ்வாறெனில் அந்த நோயானவை யாவையையும் ஓமாக்கினியின் செயலால் வரும் சூடு அந்த நோய் பெருக்கத்தினைச் சுடும் தன்மையாலாகும். 90

பெருஞ்செல்வங்கேடென்றுமுன்னே படைத்த
அருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம்வரவிருந்தெண்ணிப்
பருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் ருரே.

பெரும் செல்வம் பின்னர் கேடாகிய வறுமை என்று இவைகளை முடிந்த முடிபாக முன்னே படைத்த; கிடைத்தற்கரிய அரும் செல்வமாகும் அருட்செல்வத்தை எனக்கு தந்த தலைவனை நாடிக் கொள்ளுங்கள். அந்த நாட்டத்தாலே தான் என்றும் அழிவிலாத செல்வமான பேரின்பம் வருதற்காக நினைந்து விளங்கும் பெரும் அக்கினிச் செல்வமான ஆகுதியினை புரிந்து யாகம் செய்திட நினைந்து நன்ருர்கள்.

உலகியல் நிலையில் செல்வ இன்பம் வறுமைத் துயரம் இரண்டினையும் முறையே படைத்த தலைவன் தான் இரண்டினுலும் வரவிருக்கும் தீமைகளை நீக்கி அழிவிலாத அருட்செல்வத்து இன்பம் தர இசைந்தவன். ஆதலினுல்அந்த அரும் தன்மையைஉணர்ந்துஅச்செல்வ இன்பம் பெற அவனுக்கு ஆதுதி வேட்டு நின்ருர் அந்தணர். 91

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே.

சிவன் அழகிய உலகிற்கு ஒரு சுடர்போல்பவன். அழிவிலாத நாதன். அழகிய சுடராகி என் உள்ளத்திருக்கின்ற எல்லாம் அறிகின்ற கண்ணுய சுடருடையவன். உலகம் ஏழும் கடந்து அப்பாலுமாய் நின்ற கருணையே உருவான சோதியாயவன். அவனே ஓமாக்கினியின்ஆகுதிக்குதலைவனுவான். 92

[தொடர்ச்சி அடுத்த இதழில்]

# வயிரவக்கடவுள்

## முன் இதழின் வரலாற்றுச் சுருக்கம்

(முன்பொருகாலத்து ஐந்துதலையுடையபிரமதேவரது உச்சியில்இருந்ததலை சிவபிரானை இகழ்தலும் பிரமனபழுதை நீக்கிட சிவபெருமான் அதி உக்கிர வடிவுடைய கருணைக கடலாகும் வைரவப் பெருமானைத் தோற்றுவித்தருளினுர்.

நீல ஒளிபரக்கும் குபூர்ஜத உம்வான வடிவும் சிவந்த சடையுரு பாம்பணிந்த வெற்றரையும் சூலமும் பாசமும் ஏந்திய திருக்கரமும் அநந்தகோடி மண்டை ஓடுகள் திளைத்திடும் திருமார்பும் சிலம் பணிந்த திருப்பாதமும் அழகு பொலிய உக்கிரச் சிரிப்புடன் வைரவப் பெருமான் தோன்றியருளலும் சிவபிரான் அவரை நோக்கி மகனே பிரமனுடைய உச்சியில் இருந்த தலை நம்மை இகழ்ந்தது அதனை நீ வாங்குது எனலும் அந்நிலை கண்ட விஷ்ணுமூர்த்தி)

இன்நிலையில் இங்கு இனி நான் நிற்றல் சிறப்புடைய இயல்பாகும் கருமம் அல்லவென்று எண்ணி மூன்று கண்ணுடைய எங்கள் நாயகரான சிவபிரானை வணங்கி விரைவாக அவ்விடம் விட்டு நீங்கிப்போய் தனது வைகுந்த நகரத்தினைச் சேர்ந்து கொண்டார்.

இப் பூமியைத் தமது திருவடியாலே அளந்து முழுவதையும் மாவலிபாற் பெற்றுக்கொண்ட நாராயணக்கடவுள் அகன்றுதனது நகரை அடைதலோடும் அங்கு அவ்வேளை உக்கிரத்துடன் புறப்பட்டெழுந்த வைரவக் கடவுள் பிரமதேவருடைய அழகு விளங்கிடுகின்ற உச்சியில் உள்ள தலையைத் தனது திருக்கையின் விரலினது நகத்திஞல் கிள்ளி திருக்கையில் ஏந்தலும், பிரமனின் தலையில் நின்றும் புறப்பட்ட இரத்தக்கடல் உடனுக இப்பூமி எங்கும் பரந்து வளைந்து கொண்டது. அவ்வேளை தாமரை மலரில் ஆசனங் கொண்ட பிரமதேவனும் இறந்து கீழே வீழ்ந்தான்.

இரத்த நீரானது கடலாகப் பெருகி விரைவுடன் உலகினைத் தன்னுள் அடக்கிக் கொண்டு மேருமலையைச் சூழ்ந்து கொள்ளலும், அதுவேளை வைரவக்கடவுள் மிகு வெப்பமுடைய தமது நெற்றிக் கண்ணின் நெருப்பால் அந்த இரத்தம் முழுமையையும் ஒருங்குசேர வற்றச்செய்து இறந்த அப்பிரமதேவனுக்குப் பழமை போன்று அரிய உயிரினைக் கொடுத்தலும், அதுவேளை அப்பிரமதேவனும் உணர்வு கொண்டு எழுந்தான்.

நித்திரை நீங்கி எழுந்தவர் போன்று பிரமதேவனுக்கு மிக முன்பாகப் பழகி விளங்கிடும் நல்லுணர்வுகள்அடைந்து கொள்ளலும், தாமரை மலரில் இருக்கின்ற அந்த பிரமதேவனும் வைரவப்பெருமானின் தாமரை மலரின் செவ்வியினை ஒத்திட்ட திருவடிகள் முன்பு தனது உள்ளத்தில் பெருகுகின்ற அன்புடன் வணங்கினன் முன்புள்ளதீய அகந்தையாவும் போனவழிதெரியாது மறைந்தன.

தீமைபயக்கும் நினைவும் சொல்லும் கிளர்ந்தெழுந்த தலை நீக்கப்பட்டு அந்தத் தீய உணர்வுகளுக்குஉதவியாயிருந்த இரத்தமும் வெளிப்போன பிற்பாடு பிரமதேவர் இறந்து வீழ்ந்தும் பின்னர் வைரப் பெருமானின் நல்லருளால் உயிர்பெற் றெழுந்தபோது முன்புள்ள தீமைகள் நீங்கிட நல்லுணர்வு கைகூடப் பெற்றுக் கொள்கின்றமையால் வைரக்கடவுள் பாதத்து இப்போது இயல்பாகப் பெருகிடும் அன்பினுல் வணங்கி உரை செய்கின்ருன் தீமைநீக்கியபின்பே அருள்தோன்றும் என்பது உண்மையாம்.

ஐயனே! கேட்டருள்க. நெறிக்கண்ணுடையநின்மலவடிவாகும் சிவபெருமானுக்கு நான் செய்துகொண்டிடும் குற்றங்கள் பல உண்டு. அவைகள் அளந்தறியப் பெருதன. அந்தக் குற்றங்களால் எனது தலை நீக்கப்பெற்ற இப்பழியினைப் பெற்றேன், ஆதலின்இனி மேலும் என்மீதுகோபம் எதனையும் உமது திருவுளத்தில் கொள்ளல் வேண்டாம்.

(தொடர்ச்சி 8—ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிரவர் ....

(7–ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் இமைப் பொழுதில் இந்த உலகம் இல்லாமல் போகுமாறு அழிவு செய்யவல்ல வலிமை கொண்ட வைரக்கடவுளே! தேவரீரது அன்பாகும் அருளினைப் பெற்றுக்கொண்ட நன்மையால் யான் இப்பொழுது முன்பாகும் நல்லுணர் வெல்லாம் அடைந்து கொண்டேன். ஆனதினால் இதன் முன்பு செய்த தீமை விளைத்தும் பொல்லாங்குகளையும் சிறுமைகளையும்பொறுத் தருளவேண்டும்.

வைரவப்பெருமானே! தீய எண்ணம் தோற்றிய இந்தச் சிறிய எனது தலையும் தூய்மையடைய வேண்டு மாதலாலும்; அடியேன் இன்னமும் இதைக் கண்டுள்ள நேரத்து முன்னர் எனக்கு வந்துள்ளது போன்ற மாய எண்ணங்கள் இனியும் வராது தீர்ந்து நீக்கவும் தேவரீர் உமது மலர் போலும் திருக்கையில் இத்தலையினை வைத்துக் கொள்ளும். தேவரீர் திருக்கரத்து ஏந்திக் கொண்ட மேலாகும் சூலப்படையினைப் போன்றே இதனையும் தாங்கிக் கொள்ளும் என்றான்பிரமதேவன்.

என்று இத்தகையதான வார்த்தைகளைப் பிரதேவர் மொழிந்து எம்பிரானை வணங்கிக் கொள்ளலும், அதுவேளை வைரவப்பெருமான் நான்கு தலைகொண்ட பிரமதேவனை நோக்கி, பிரமனே! நீ விரும்பியவாறு அவ்வண்ணமே ஆகட்டும் என்று எமது ஐயன் அருள்புரிந்து பொன்மயமாகும் மகாமேருமலையை விடுத்து நீங்கி அப்பாற் செல்வதற்குப் புறப்பட்டருளினார்.

காண்பார்க்குக் கண்ணிறையும் நீலஒளிபரக்கும் மேனிஉடைய சிறிய உருவும், கோபநகையும் அருள் சுரக்கும் மலர்ச்சியும் சூலமும் பரசமுப் பிரமன் தலையாகும் மண்டை ஓடும் திருக்கரத்து ஏந்தியவாறு புறப்பட்ட எமதுஐயன் காலவேகன் அக்கினிமுகன் சோமகன்ஆலகாலன் அதிபலன் என்னும் இவர்கள் ஆதியாகச் சொல்லப்பெறுகின்றபூதத்தலைவருடன் பெரும் பூதப் படைகளைத் தாமாக அங்கு உண்டாக்கிக்கொண்டார்.

இப்பூதப்படைகளின் எண்ணிக்கை இவ்வளவு எனக் கணக்கிட முடியாத படை கொண்டு எமது வைரப் பெருமான் புறப்பட்டு அகந்தை மமதையான குறைகளுடைய முனிவர் இப்பூமியில் இருக்கும் வனங்கள்தோறும்அது வன்றி அக்குறையுடைய தேவர்கள் வாழும் வான உலகங்களின் எல்லைகள்தோறும் வரையுடன் போயினார்,

அவ்வண்ணம் முனிவர் தேவர்களுடைய மேனியில் ஊறுகின்ற மேன்மையான இரத்த நீரினைத் தமது திருக்கரத்து உள்ள மண்டை ஓட்டில் பிச்சையாக ஏற்று இரத்தத்தைக் கொடுத்தமையால் அம்முனிவர் தேவா மயங்கி இறந்தபோது மீண்டும் அவர்கள் உயிர்பெற்றெழ அருள்செய்து அவர்கள் உள்ளம் எல்லாம் தூயதாகும் படி செய்தருளினார் முதிய அருளாகும் கடல் போன்று விளகிடும் வைரவப் பெருமான்.

சிறிய உருவுடைய வைரவக்கடவுள் அந்தத் தேவர்களின் ஊரெல்லாம் விரைவுடன் சென்று அங்குள்ளோரின் இரத்தத்தினைப் பிச்சையாக ஏற்று அவ்விடங்கள் நின்றும் சீக்கிரமாக நீங்கி பின்னர் முன்பு தனது கர்வத்தை நீங்கியவராகும் நெடிய வடிவுடைய நாராயணனது உலகில் சென்றருளினார். அப்போது அவர் போதலும் அவர் முன்னே மிக விரைவுடன் சென்றார்கள் பூதப் படை வீரராயவர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## என் நாயகன் ....

1–ம் பக்கத் தொடர்ச்சி

துதித்து முன்பு வணங்கி நிற்கும் நேரத்தில் வணங்கினார்க்கு விநாயகப் பெருமான் அருள் புரிந்திடுதலும் அந்த ஒருகாலையில் எம்பிரானிடம் கொண்ட உள்ளப்பரிவால் இது ஒரு நிலைமையைத் தேவர்கள்கூறுவார்கள்

எந்தைபெருமானே! நீர் கேட்டிடுக. எம்மை அலையவைத்த யானைமுகமுடைய கயமுகாசூரனை அழித்தீர். அதனால் நாம் உய்ந்தோம். அவ்வாறாயினும் உமது அடியோம் இவ்விடம் வந்து உமக்குத் தந்திடும் கைம்மாறு யாதொன்றும் இல்லையே.

நேற்றைவரையும் நிகரிலாத அந்தக் கயமுகாசூரனின் முன்பாகச் செய்திடும் அந்த நித்திய பணிவிடையை எந்தை பெருமானே உமது திருமுன்பு இன்று தொடக்கம் நாம் செலுத்திடுவோம் என்று வேண்டலும் அப்படியே செய்யுங்கள் என்று கூறியருளினார் அருள்நீர்மையுடைய விநாயகப்பெருமான்.

இத்தன்மையாய நேரத்தில் அங்கு நின்றிட்ட தலையாய கடவுளர் யாவரும் அன்புற்று தமது முன்கைகளின் விரல்களை மடக்கி பிடித்துக் கொண்டு மும்முறையாகத் தத்தமது நெற்றியில் இருபுறமும் முன்னாகக் குட்டினார்கள்.

அப்பால் இணையான தங்களது கைகளைஎதிரெதிராகமாற்றிக் கொண்டு துணையாகும் குண்டலமணிந்த காதினைத் தொட்டு மூன்றுமுறை கணைக்காலும் பின்புறமும் பொருந்தும்படி தவறிலாத அன்புடன் தாழ்ந்து எழுந்து எம்பிரானைத் துதித்தனர். இதுகாறும் பாசத்து உலழவைக்கும் கொடுமைக்கு குட்டிக் கும்பிட்டவர், இப்போது தெய்வத்திற்கு அதனைச் செய்கின்றனர்.

இணக்கமாய அன்புடன்யாரும் இதனைப் புரிந்து வணங்கி நிற்றலும் அதுகண்டு மகிழ்வால் சிறந்தான் இமயமலை தந்த பெருமாட்டியின் திருக்குமரன் விநாயகப்பெருமான். தேவர்கள் செய்த இந்த வழிபாட்டின் இயல்பைக் கண்டு பூதங்கள் மகிழ் சிறந்து பெரும் கடல்போல் இரைந்து ஆர்த்தன.

அங்கு நின்ற கடவுளர் விநாயகப் பெருமானை நோக்கி பெருமானே! உனது முன்பாக உலகில் உள்ளார் யாவரும் இன்றுதொட்டு எம்மைப் போல் இந்த வணக்க முறையை நன்றுடன் செய்திடற்கு தேவரீர் நல்லருளினைப் புரிந்திடுவீராக என வேண்டலும்.

கடல்போலும் கருமை ஒளியுடைய விநாயகப்பெருமான் அத்திறமே நடைபெறும்படி வரம் கொடுத்து இந்திரன், நெடிய வடிவுடைய திருமால், பிரமன் முதலாக அங்கு நின்றுள்ள கடவுளர் யாவர்க்கும் செல்லுமாறு விடைகொடுத்து விடுத்தார் என்க.

தாமரைக் கண்ணனைய விஷ்ணு, பிரமன், இந்திரன் தேவர் யாவரும் அந்த திருக்கைலாயமலையை விரைவில் நீங்கி தமது உலகுகள் தோறும் சேர்ந்து யானைமுகமுடைய விநாயகக் கடவுளின் நல்லருளால் சிறந்து வீற்றிருந்தார்கள்.

இத்தன்மையாக முன்னைய வேத முதல் எழுத்தாகிய எந்தைபெருமான் அநேகம் அற்புதங்களை நிகழ்த் மகிழ்வுடன் என்றும் அமர்ந்தருளுகின்றார்.

முற்றும்

---

# திருவிளையாடல்

மதுரை நகரில் அமர்ந்த அறியொணாத கடவுள் சிவன் உலகம் உய்யப் புரிந்தருளிய திருவிளையாடல் பல உள. அவற்றினில் ஒன்றான இந்திரன் பழி தீர்த்த வரலாற்றை இங்குதருகின்றோம்.

முன்பொருகாலத்துள்ள யுகம் ஒன்றில் வண்டுகள் மொய்த்திடும் மந்தார மரத்தின் நீழல் பொன்னாய் மிளிரும்அழகுடைய தனங்களுடன் அழகின் மிக்க உருவுடைய இந்திராணியினது நாயகன் இந்திரன் தனது உலகத்தில் பொற்பு மிகுந்த அணிகலன்கள் மின்போல் விளங்கி ஒளிர தனது அரசமண்டபத்து சிம்மாசனத்து அமர்ந்து அங்கு நிகழ்ந்து கொண்டிருந்த அன்னப் பறவை போலும் நல முடைய எழில் கொண்ட தேவப பெண்கள் நடமாடுகின்ற நடனத்தின்மேல்ஆர்வம் வைத்தான்.

அந்தச்சமயத்தில்; தெய்வத் தன்மை கொண்ட தாமரைப் பூ வண்டுகள் தன்னுள் பொதிந்து மலர்ந்திட அதனுடன் இணைந்து கொடிப்பூ கோட்டுப்பூநிலப்பூ என்னும் மூவகை மலரும் ஒரு கொடியில் பூத்து மலர்ந்தால் அக்கொடி எத்துணை வனப்புடையதாமோ அதேபோன்ற அழகும் எழிலும்நலனும் செவ்வியுமுடைய இளம் கன்னியருடைய கூத்தும் அந்த பெண்களது வாயினால் நிகழ்ந்து கொண்டிருக்கும் பாடலையும் அந்த இந்திரன் கண்டும்கேட்டு சொல்லற்கரிய எல்லையிலாத இன்பக்கடலுள் அழுந்தி இருந்தான். அதனாலே அப்பெண்களது இச்சை மேலாகி செய்வதறியாது முழுவதும்காமஉணர்ச்சி வசத்தனாய் அந்த இன்பத்தில் அழுந்தி இருந்திடும் நேரத்து பாம்பணிந்த சடையுடைய பரம்பொருளாகும் சிவனே என ஒப்ப விளங்கும் தமது குருவான அறவாழி அந்தணன்வியாழபகவான் அவ்விடம் எழுந்தருளி வந்தார்.

அவர் வருகையைக் கண்ணுற்றும் இந்திரதேவன் தனது கண் கண்டதெய்வமாகும் வியாழபகவான் அவ்விடத்தே வந்தாரே என்பதை உணர்ந்து எழுந்து அவருடைய திவ்விய பாதங்களை வணங்கிடாத வனாய் அப்பெண்கள் மீது நோக்கிய காமஇன்பவசத்தனாய் இருந்தான். ஆதலின் இது எதை உணர்த்திற்று என்றால் பெண்கள் மீது மனம் போக்கினாருடைய சிந்தை பிறிதொரு நற்கருமத்திலும் செயல் படாது என்பதைக் காட்டிற்று.

தன்னை அவமதித்த தன்மையை உணர்ந்து குருவானவியாழபகவான் சென்றிடலும்: அந்நிலையாக தேவஅரசனுடையதிருவின் விருத்திகள் யாவும் பொலின்றி சிறிது சிறிதாகக் குறைதலால் இந்திரன் அச்செயல் பாட்டை அறிந்து; ''இந்தக்கேடு எனது நன்மையுடைய முன்னான் குருவை எனனிடம் வந்தபோது பேணிடாத குற்றத்தால் விளைந்தது என எண்ணி அல்லல்பட்டு தனது குருயாண்டுற்றார் என அவரைத் தேடுவானாயினான்.

அவ்வணம் தேடமுயன்ற இந்திரன் தனது குருவினது இருப்பிடம் புகுந்து பார்த்தான். அங்கு அவர் காணப்படவில்லை. பின்னர் பாசங்களை நீக்கிக் கொண்டமையால் என்றும் புனிதராகும் தேவர்கள் இருக்கும் உலகம் எல்லாம்; இன்னமும் அதனின் மேலான முனிவர்கள் இருந்திடும் இடமும் ஆக; இந்த மூன்று உலகங்களில் எங்கும் தன்குருவான வியாழ தேவனைத் தேடி காண முடியாதவனாய் கவலையுற்று எங்குற்றார் எனது குரு என்னும் கவலைபெருகும் மனத்தினை உடையனாகி இந்திரன் அப்பால் நான்முகக் கடவுளாகும் பிரமனின் இருப்பிடம் சேர்ந்தான். பிரமதேவருடைய இருப்பிடத்திலும் தனது குருவைத் தேடிக் காணாதவனாய் அவ்வுலகிற்கு ஏந்தலான பிரமதேவரைத் தொழுது தாழ்ந்து போற்றி தனக்கு முன்பு நேர்ந்துள்ள காரியங்களை இந்திரன் சொல்ல பிரமதேவர் கேட்டு; குருவாய வியாழபகவானை இந்திரன் அவமதித்த பாவம் சுடர்க்கொழுந்து போல் இந்திரனைப் பற்றி உண்ணும் தன்மையாக வருவதைப் பார்த்து இதனை அவர் சொல்கின்றார் ''இந்திரனே அத்தகைய உன் குருவைக் காணும் அளவும் நீ காசிபமுனிவன் தனு என்பாளுடன் கூடிப் பெற்றதொரு அசுரன். துவட்டா என்பவனது மகன் மூன்று தலையுடையவன் விச்சுவ உருவன் என்னும் பேருடையவன் அவன் அசுரர் குலத்து வந்தாலும் அறிவிலே மேம்பட்டவன். அவனைக் குருவாகக் கொண்டிடுவாயாக என்றார் இந்திரனும் அதற்கு இணங்கினான்.

பிரமனுடைய வார்த்தையை இந்திரன் ஏற்று அவரைத் தொழுது மீண்டு சென்று பிரமனது சத்திய உலகம் நீங்கி பிரமன் செய்த தந்திர உபாயத்தை தான் விளங்கிக் கொள்ளாதவனாய்; தனது உள்ளத்தில் எழும் காதல் பெருக விச்சுவ உருவன் என்னும் அசுரனை அடைந்து அவனை தான் வழிபடும் குருவாகக் கொண்டான். அப்படி குருவாகக் கொண்டு வருங்கால் வஞ்சனையை உடைய அந்த குருவினது தீய கருத்தினை உணராதவனாய் ஓர் நாள் அவனை நோக்கி குருவே எனக்காக ஓர் யாகம் ஒன்று செய்திடல் வேண்டும் என்னலும்; குருவான விச்சுவ உருவன் அது கேட்டு சரிதான் என ஒப்புக் கொண்டு யாகம் செய்யத் தொடங்கி அப்பொழுது தன் வாயால் சொல்லும்

தொடர்ச்சி அடுத்த இதழில்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வைத்தியலிங்கம் கந்தையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org